# சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலில் எதிர்பாராத தாமதம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 11

இதழ்:52

தபால்பெட்டி எண்: 49

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 21 முஹறம் 15 வியாழக்கிழமை 3-4-69

சர்க்கரை வேண்டுமா?



சிறிதும் கலப்பற்ற சுத்தமான

சர்க்கரை

தொகையாக எமது கையிருப்பிலுண்டு

புத்தாண்டைபொலிவுடன் கொண்டாட எம்மை நாடுங்கள்

ஆ. வைத்திலிங்கம் & கோ

45, கே.கே.எஸ். ரேட் - யாழ்ப்பாணம்

போன்: 663

## விண்ணப்பம்செய்ய பலர் விரும்பவில்லையாம்

கொழும்பு, புதன்

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா திரும்ப விரும்புபவர்களோ இங்கு இலங்கையராகப் பதிவுசெய்ய விரும்புபவர்களோ அடுத்த வருடம் மேமாதத்துக்குள் விண்ணப்பித்து ஆகவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தும் இதற்கு எதிர்பார்த்த அளவு விண்ணப்பங்கள் வந்து சேரவில்லையென்றும் சம்பந்தப்பட்டவர்கள் இதில் அதிக ஊக்கம் காட்டப்படாதது போல் தெரிவதாகவும் பாதுகாப்புவெளிவிவகார அமைச்சைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இது இந்த ஒப்பந்த அமுலை ஓரளவு பாதிக்கலாமெனக் கருதப்படுகிறது.

இலங்கையிலிருந்து திரும்புபவர்கள் தமது இனத்தாருடன் அங்கு வசிக்க முடியாத நிலை ஏற்படுமென நினைப்பதால் தாயகம் திரும்புவதில் தயக்கம் காட்டுவதாகவும் இலங்கைப் பிரஜைகளாகவிருப்பவர்கள் காலப்போக்கில் தாம் இலங்கையராகலாம். அதற்குள் பல தரப்பட்ட சட்ட திட்ட நடைமுறைகளுக்குள் எதற்காக சிக்கிக்கொள்ளவேண்டும் என கருதுவதாகவும் இவற்றுலேயே விண்ணப்பங்கள் வந்துசேர்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் நம்பப்படுகிறது.

பாரதத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புபவர்களுக்குமறுவாழ்வுக்கென நீலகிரி அந்தமான் தீவு போன்ற இடங்களில்தேயிலை ரப்பர் தோட்டங்கள் ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் வரையப்பட்டும் இங்கிருந்து திரும்பிய எவரும் அதில் அமர்த்தப்பட்டதுபற்றி சரியான தகவல் இன்னும் இல்லாதிருப்பதுவும் இங்கிருந்து செல்ல விருப்புபவர்களை அதிக ஊக்கப்படுத்தாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பூரி சங்கராச்சார்யர் மீது இந்திய ஆட்சிமன்றம் சீற்றம்

## கைதுசெய்ய வேண்டும் என அங்கத்தினர் பலர் கோரிக்கை

### தீண்டாமையைஆதரித்துப்பேசியதன்விளைவு

புதுடில்லி, ஏப்ரல் 2

**தீண்டாமையை ஆதரித்து பூரிசங்கராச்சார்ய, சுவாமிகள் சமீபத்தில் பீகார் ராஜ்ய தலைநகரான பாட்னுவில் நடைபெற்ற இந்துமத மகாநாடொன்றில் தெரிவித்த கருத்துக்கு இந்திய ஆட்சிமன்றத்தில் அங்கத்தவர்கள் பலர் கோபாவேசத்துடன் கண்டனம் தெரிவித்தனர். பூரிசங்கராச்சாரியாரைக் கைதுசெய்யவேண்டுமென்று அங்கத்தவர் சிலர் அரசாங்கத்தை வற்புறுத்தினர்.**

பசுவதை எதிர்ப்பு இயக்கம் காரணமாக புதுடில்லியில் கலகம் ஏற்பட்டபோது பூரிசங்கராச்சாரியார் கைதுசெய்யப்பட்டு புதுச்சேரியில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டபின்னர் விடுதலைசெய்யப்பட்டதும் தெரிந்ததே.

சமீபத்தில் பாட்னுவில் ... டத்தில் திருத்தம் செய்யப்படவேண்டுமா என்பது பற்றி ஆலோசனை செய்யப்படுவதாகவும்தெரிவித்தார்.

சங்கராச்சார்ய சுவாமிகளின் பேச்சு இந்திய அரசியல் சாஸனத்தின் அடிப்படைக் ... மீறியிருப்பதுடன் ... விரோதமானவையாகஇருப்பதாகவும் அவர் கூறினர்.

... விஷயம் பற்றி தமது கருத்துக்களைத் தெரிவிக்கவிரும்புவதால் இதுபற்றி பூரண விவாதம் நடத்துவதற்கு ஒரு தினத்தை ஒதுக்கவேண்டுமென தி. மு. கழக தலைவர் திரு. அன்பழகன் கேட்டுக்கொண்டார். விஷயா லோசனைக்குழுவுக்கு இதை விடலாமென சபாநாயகர் தெரிவித்தார்.

## கிராமசேவையாளரிடம் சரண்புகுந்தார்

சூாலி, புதன்

கொலை செய்ததாகச் சந்தேகிக்கப்பட்ட நபர் ஒருவர் கிராமசேவையாளரிடம் சரண்புகுந்தார்.

மெதகிம்பியா என்ற இடத்தைச் சேர்ந்த கே. எச். சிறிசேன என்பவர் மீது கொலைக்குற்றச்சாட்டின் பேரில் வாறண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இவர் வந்துரம்பாவைச் சேர்ந்த கிராமசேவகரான திரு. கே. ஏ. சுமணசேனவிடம் சரண்புகுந்தார்.

இதன் பின்னர் சிறிசேன பத்தல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் டி. எம். டி' எஸ். விக்கிரமசூரியவிடம் ஒப்படைக்கப்பட்டு காலிமேலதிக மாஜிஸ்திரேட் திரு. எஸ் ஆனந்தகுமாரசுவாமி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது மாஜிஸ்திரேட் அவரை இம்மாதம் 8-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறும் மற்றச் சந்தேக நபரான எச். கே. ஆர்னலிஸ் அல்லது தெனகமஐயா என்பவரையும் அன்று ஆஜர் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

மெதகாமியா என்றஇடத்தைச் சேர்ந்த வை.ஜி.ஹினி அப்புஹாமி என்பவரைக் கொலை செய்தது சம்பந்தமாக இவர்கள் மீதுகுற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## வெட்டிகாயப்படுத்தியவருக்கு அபராதமும் சிறையும்

## திருக்கோணமலை மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறது

திருக்கோணமலை, புதன்

"திருக்கோணமலை மாவட்டம் இன்று சகல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலைமை இன்னும் தொடர்ந்துவருவதற்கு அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது. இலங்கையின் ஏனைய மாவட்டங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள், உரிமைகள், வசதிகள் அனைத்தும்திருக்கோணமலை மாவட்டத்துக்கும் வழங்கப்படவேண்டும்

இவ்வாறு மூதூர் இரட்டைத் தொகுதியின் 2-வது பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. எல். ஏ. மஜீத் ஈச்சந்தீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: "நாட்டு மக்களின் சீரான வாழ்க்கைக்கு ஏற்ப அரசாங்கம் அமையவேண்டும். ஒரு குறிப்பிட்ட சமூகத்துக்காக மட்டும் அரசாங்கம்அமையக்கூடாது. தேசிய அரசாங்கம் இதனை நன்குணர்ந்து இதைக் கருத்தில் கொண்டு செயலாற்றவேண்டும்.

மூதூர் வட்டார கல்வி அதிகாரி ஜனுப் எம். எம். இப்ராகிம் பேசுகையில் "பாடசாலை மாணவ மாணவிகளின் உடல்விருத்தியை மட்டும் ஒரு சாதனமாய்க் கொண்டு விளையாட்டுப் போட்டிகள் அமைகின்றன. மாணவ மாணவிகளின் உடல் விருத்தியைப் பாதுகாப்பதில் ஆசிரியர்கள் முன் நிற்கவேண்டும்.

தேசியக் கொடியை வட்டாரக் கல்விஅதிகாரி ஏற்றிவைக்க ஆலங்கேணி கிராமச்சபைத் தலைவர் திரு. கே. செல்லத்தம்பி பாடசாலைக் கொடியை ஏற்றிவைத்தார்.

## 'ஈழநாடு வளர்ச்சிக்கு மக்கள் ஆதரவுதேவை'

யாழ்ப்பாணம், புதன்

'ஈழநாடு' பத்திரிகை தமிழ் பேசும் மக்களின் தேவைகளை உணர்ந்து செயலாற்றி வருகிறது, இதனை தமிழ் மக்கள் உணர்ந்து அதன் வளர்ச்சிக்கு முழு ஆதரவையும் தரமுன்வரவேண்டும்.'

இவ்வாறு முதலியார் செ. ... விழா அமைந்திருக்கவேண்டும் என எடுத்துக்கூறினார்.

இணைச்செயலாளர்களான திரு. ச. அம்பிகைபாகன், திரு. கே. சதாசிவம் ஆகியோர் பிரமுகர்களை வரவேற்றுப்பேசினர்.

விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கென ...

## "உயர்ந்த சேவையால் உயர்ந்தவர்"

யாழ்ப்பாணம், புதன்

"உயர்ந்த சேவையினால் எல்லோரது உள்ளத்திலும் இடம் தேடிக்கொண்டுவிட்டார் திரு. ஜேசுதாசன். அவரது பண்பு மிகவும் போற்றுதற்குரியது."

இவ்வாறு 41 வருட சேவைக்குப்பின் ஓய்வுபெற்ற தந்தி தொடர்பு என்ஜினியர் திரு. கே. ஜேசுதாசனுக்கு யாழ்ப்பாணம் தந்தி தொடர்பு ஊழியர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தில் தலைமைதாங்கிப் பேசிய பதில் என்ஜினியர் திரு. கே. ஜெயபால சுப்பிரமணியம் பாராட்டுத் தெரிவித்தார்.

சுப்பிரிண்டன்டிங் என்ஜினியர் திரு. ஆர். முத்தையா பேசுகையில் திரு. ஜேசுதாசன் ஒரு கடமை வீரர் என்றும், இது விஷயத்தில் அவர் நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்கினர் என்றும் கூறினர்.

திரு. வி. கந்தையா பேசுகையில் திரு. ஜேசுதாசன் பொறுமையின் இருப்பிடம் என்றும் பல நல்ல காரியங்களை இதன் மூலம் சாதித்தார் என்றும் கூறினர்.

திரு. எஸ். ராதாகிருஷ்ணன் பேசுகையில் திரு. ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ணதச் சேர்ந்த பொறுப்பதி காரி இன்ஸ்பெக்டர் டி. எம். டி' எஸ். விக்கிரம

கொலை செய்தது சம்பந்த மாக இவர்கள் மீதுகுற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## வெட்டிகாயப்படுத்தியவருக்கு அபராதமும் சிறையும்

வல்வெட்டித்துறை, புதன்

கம்பர் மலையைச் சேர்ந்த கே. வைத்தியலிங்கம், எஸ். செந்திவேல் ஆகிய இருவ ரும் அதேயிடத்தைச் சேர்ந்த க. சின்னத்துரை, சி. பழனிவேல் என்பவர்களுக்கு கடந்த செப்டெம்பர் மாதம் 11-ந் திகதி கத்தியால் வெட்டியும், கொட்டனல் அடித்தும் படுகாயம் உண்டுபண்ணியதாக வல் வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ் திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளை குற்றவாளியாகக்கண்டு 1-ம் எதிரியான வைத்திலிங்கத் திற்கு 3 மாதச் சிறையும் ரூபா 500 அபராதமும், இரண்டாவது எதிரியான செந்திவேலுவுக்கு ரூபா 100 ராதமும் விதிக்கப்பட்டது.

எதிரிகள் இருவரும் முறையே ரூபா 1000, ரூபா 750 பிணையில் அப்பீல் செய் கின்றனர்.

## கார் விபத்தில் ஐவர் படுகாயம்

நல்லூர், புதன்

நேற்றிரவு வெள்ளவத்தையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கார் ஒன்று கிளிநொச்சிக்கும் முருகண்டிக்குமிடையில் ஒரு மரத்துடன் மோதியதால் ஐவர் படுகாயமுற்றனர்.

காரில் பிரயாணஞ்செய்த திரு. ஜி. மகாதேவா, திருமதி மகாதேவா, ம. இளங்கோவன், கார்ச் சாரதி எஸ். இராமலிங்கம், ஆர். சுப்பிரமணியம் ஆகிய ஐவரும் யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். விசாரணை நடைபெறுகிறது.

## புதுவருடத்திலாவது பணம் கிடைக்குமா?

### பீடிப்புகையிலை உற்பத்தியாளர்மகஜர்

அளவெட்டி, புதன்

பீடிப்புகையிலை கொள்வனவு பணம் தமிழ்சிங்கள புதுவருடத்துக்காவது கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி யாழ். மாவட்ட பீடிப்புகையிலை உற்பத்தியாளர், உபசபாநாயகர் திரு எம். சிவசிதம்பரத்தை மகஜரொன்றில் கேட்டுள்ளனர்.

1967-ம் ஆண்டு யாழ், மாவட்ட விவசாயிகள் பயிரிட்ட பீடிப்புகையிலைக்கான சுமார் 2 லட்சம் ரூபா பணம் இன்னும் தமக்கு கிடைக்கவில்லையென்றும் இதனல் அடுத்த வருட பீடிப்புகையிலைச் செய்கையும் பாதிக்கப்பட்டதாகவும் மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுபற்றி உப சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரத்துக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

1967-ம் ஆண்டு நாம் பீடிப்புகையிலை கொடுத்தும் அதற்கான பணத்தை இது வரையும் பெருது வாழ்க்கைக் கஷ்டம் ஏற்பட்டுள்ள தோடு விவசாய தொழிலுக்கான பொருள்களையும், வாங்க பணம் இல்லாமல் தவிக்க வேண்டியுள்ளது. இப்படி பணம் வழங்காததே சென்றவருடம் இப்புகையிலைச்செய்கை செய்யாமல் சிகரெட்புகையிலையேசெய்து வரஏதுவாகியுள்ளதுஎனவே எமது தொழில் விருத்தியடைய எமது பணம் கிடைக்க உதவவேண்டும்,

கம் காரணமாக புதுடில்லியில் கலகம் ஏற்பட்ட போது பூரி சங்கராச்சாரியார் கைதுசெய்யப்பட்டு புதுச்சேரியில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டபின்னர் விடுதலைசெய்யப்பட்டதும் தெரிந்ததே.

சமீபத்தில் பாட்ணவில் நடைபெற்ற இந்துமத மகாநாட்டில் பூரிசங்கராச்சார்ய சுவாமிகள் பேசுகையில, தீண்டாமை அவசியம் தானென்று கூறியதுடன் 'ஜனகணமன' என்ற இந்திய தேசிய கீதம் மதசம்பந்தமான் மகாநாடுகளில் பாடுவதைக்கண்டித்ததுடன் 'ஜனகணமன' தேசியகீதம் பாடப்பட்டதும் அந்த மகாநாட்டிலிருந்து வெளிநடப்புச்செய்து பரபரப்பை ஊட்டியதும் வாசகநேயர்கள் அறிவார்கள்.

இந்திய ஆட்சிமன்றமான லோகசபையின் இன்றைய கூட்டத்தில் பாட்ண மகாநாட்டில் பூரிசங்கராச்சார்ய சுவாமிகள் நிகழ்த்திய உரை பற்றியும் அவர் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் காங்கிரஸ் அங்கத்தினர் நால்வர் பிரச்னையைக் கிளப்பினர். இதைத்தொடர்ந்து அங்கத்தவர்கள் பலர் பூரி சங்கராச்சாரியாரின் பாட்ண மகாநாட்டுப் பேச்சைக்கண்டித்ததுடன் அவரைக் கைதுசெய்யவேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

அங்கத்தினர்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்ட இந்திய உள்துறை அமைச்சர் திரு. சாவன் பேசுகையில், அறிவுக்கு ஒவ்வாத பத்தாம்பசலி பிற்போக்குக் கருத்துக்களை பூரிசங்கராச்சாரியார் தெரிவித்திருப்பது பற்றித் தாங்களும் வருந்துவதாகவும் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி ஆராய்ந்துவருவதாகவும் கூறியதுடன் தீண்டாமை ஒழிப்புச் சம்பந்தமாகச் சட்

பற்றி ஆலோசனை செய்யப் படுவதாகவும்தெரிவித்தார்.

சங்கராச்சார்ய சுவாமிகளின் பேச்சு இந்திய அரசியல் சாஸனத்தின் அடிப்படைக் கொள்கைகளையே மீறியிருப்பதுடன் சட்ட விரோதமானவையாகஇருப்பதாகவும் அவர் கூறினர்.

அங்கத்தினர் பலரும் இவ்

வதால் இதுபற்றி பூரண விவாதம் நடத்துவதற்கு ஒரு தினத்தை ஒதுக்கவேண்டுமென தி. மு. கழக தலைவர் திரு. அன்பழகன் கேட்டுக்கொண்டார். விஷயாலோசனைக்குழுவுக்கு இதை விடலாமென சபாநாயகர் தெரிவித்தார்.

## தென்மராட்சி வாலிப இயக்கம் கண்டனம்.

அளவெட்டி, புதன்

பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பலாத்காரச் செயல்களுக்கு தென் மராட்சி வாலிபர் இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தென். மராட்சி வாலிபர் இயக்கத் தலைவர் திரு. க. நடராசா பன்றித்தலைச்சியில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற பலாத்காரச் செயல்களை கண்டித்து பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளதாவது:

வடபகுதியில் நிலவும் சாதிப்பாகுபாட்டை ஒழிக்க விரும்பாதவர்கள் இருபகுதியினர் உள்ளனர். ஒன்று சைவ அனுட்டான சபை போன்ற பிற்போக்கு வாதிகள். மற்றவர்கள் சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினர். தீண்டாமை வைத்து தமது கட்சியை வளர்க்க நினைக்கும் இவர்களுடைய செய்கைகளால் இப்பிரச்சனை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டுமென்று விரும்புகின்ற பலருடைய முயற்சிகள் வீணகின்றன. நாட்டில் குழப்பத்தை உண்டாக்க மாத்திரம் நினைக்கும் இவர்களுடைய இயக்கத்தைத தடை செய்யும்படி நாம் இனி அரசாங்கத்தைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்து விட்டோம்.

பன்றித்தலைச்சி அம்மன் கோவில் கிணற்றுக்குள் உமியையும், அழுக்குகளையும் இட்டது போன்ற அநாகரீகச்செயலிலும் பார்க்க, கைக்குண்டு வீச்சு படுமோசமான அநாகரீகச் செயலாகும். உண்மையில் எங்களுடைய பிரச்னைகள் தீரவேண்டும் என்ற ஆசை இருந்திருந்தால், இவ்வாறன பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள்.

இப்படிப்பட்டவர்களுடைய தலைமையில், பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிவேசத்தில் கலந்துகொள்வதில்லை என்று தென்மராட்சிப் பகுதி வாலிப இயக்கம் ஏகமனதாகத் தீர்மானித்தது மிகவும் பொருத்தமான காரியமாகும். எனவே சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினரை இதில் இனி மேல தலையிட வேண்டாமென்று, இப்பிரச்சனை தீரவேண்டுமென்று துடிக்கும் நாம், உருக்கமாகக் கேட்டுக் கொள்கிறேம்,''

## நேபாள பிரதமர் பதவி துறந்தார்

காட்மாண்டு ஏப்2

நேபாள பிரதம மந்திரிப் பதவியிலிருந்து திரு. சூர்ய பகதூர்சாபா ராஜினுமாச் செய்திருக்கிறுர். 1967-ம் ஆண்டு ஜனவரிமாதம்நேபாளத்தின் பிரதம மந்திரியாகப் பதவி யேற்ற திரு தாப்பா தமதுராசினுமாவை மன்னர் மகேந்திரரிடம் நேற்றுச் சமர்ப்பித்தபின் நேபாள வானெலி மூலம் விடுத்த செய்தியொன்றில் நீண்டகாலம் தாம் பிரதமர் பதவியிலிருந்து விட்டதாகவும் மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்கவும் மந்திரி சபையில் மாறுதல் ஏற்படவும் தாம் ராஜினுமாச் செய்துள்ளார்.

நேபாளத்தின் அயல் நாடுகளில் நிலவும் சம்பவங்கள் நேபாளத்துக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் இதைக் கவனத்தில் கொள்ளத் தவறினல் நேபாள ஜனநாயகத்துக்கு ஆபத்து நேரிடலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சாரணப்படை ஆசிரியர்களுக்கு பயிற்சி

நுவரெலியா, புதன்

''வூட் பாஜ் பெறுவதற்காக நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து 42 சாரணப் படை ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்படுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த ஆசிரியர்களுக்கு நுவெரெலியாவில் உள்ள பீதுறு சாரண முகாமில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் சர்வதேச சாரண படையின் இலங்கைப் பிரிவு தலைவர் பிரிகேடியர் திரு ஸி பீ. ஜெயவர்த்தனுவும் உதவி முகாம் தலைவரும் பயிற்சி வகுப்புகளை நடாத்துவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது, இவ் வகுப்புக்கள் தமிழிலும், சிங்களத்திலும் நடைபெறுமெனத் தெரிகிறது.

'ஈழநாடு' பத்திரிகை தமிழ் பேசும் மக்களின் தேவைகளை உணர்ந்து செயலாற்றி வருகிறது, இதனை தமிழ் மக்கள் உணர்ந்து அதன் வளர்ச்சிக்கு முழு ஆதரவையும் தரமுன்வர வேண்டும்.'

இவ்வாறு முதலியார் செ. முத்துத்தம்பி 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடுவது பற்றி ஆலோசனை நடத்திய செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

டாக்டர் வி. ரி. பசுபதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடபகுதி பொலிஸ் சுப்ரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தமது கருத்துக்களை வெளியிடுகையில் தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்தும் வகையில்இவ்

ளுர்.

இணைச்செயலாளர்களான திரு. ச. அம்பிகைபாகன், திரு. கே. சதாசிவம் ஆகியோர் பிரமுகர்களை வரவேற்றுப்பேசினர்.

விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கென நான்கு உபகுழுக்கள் தெரிவு செய்யப்பட்டன. யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம் பிள்ளை, இ. போ. ச. வட பகுதி முகாமையாளர் திரு. கே. ஆர். வேலுப்பிள்ளை, திரு. எஸ். பத்மநாதன், டாக்டர் கே. கனகரத்தினம், திரு எஸ். யு, சோமசேகரம், திருமதி ஆறுமுகம் ஆகியோரும் கலந்துகொண்டனர், (ந. நி)

### ஈழநாடு 10-வது ஆண்டு பூர்த்தி விழா

## கலை, விளையாட்டு, நிகழ்ச்சிகள் கவனிக்க நான்கு குழுக்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு பூர்த்திவிழாவை முன்னிட்டுகலை, விளையாட்டு, சரித்திர, ஊர்வலம் ஆகியன நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்வதற்கு நான்கு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

பின்வருவோர் இக்குழுக்களின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**விளையாட்டு அமைப்புக் குழு:**

தலைவர்: டாக்டர் கே. கனகரத்தினம் (இளைப்பாறிய வைத்திய அத்தியட்சகர், கொழும்பு ஆஸ்பததிரிகள்.) காரியதரிசி: திரு. ஈ. சபாலிங்கம், (அதிபர் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்) நிர்வாகக் குழு: வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்திரு. ஆர். சுந்தரலிங்கம், திருமதி எம். தம்பையா (அதிபர் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.) திரு. இ. க. குமரையா (யாழ்ப்பாணம் கச்சேரி), திருமதி குகதாசன் (பாடசாலை உடல் நலப் பரிசோதகர்.) திரு. சிவரத்தினம் (பாடசாலை உடல் நலப் பரிசோதகர்), திரு. கே. ஆர். வேலுப்பிள்ளை, பிரதேச முகாமையாளர், இ. போ. ச. யாழ்ப்பாணம்.

**கலை அமைப்புக் குழு**

தலைவர்: யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசபிள்ளை. காரியதரிசி: திரு. என். சிவ சிதம்பரம் (சமுகசேவைத் திணைக்களம் செயலகம், யாழ்ப்பாணம்.) நிர்வாகக் குழு: திரு. என். சபாரத்தினம்' (அதிபர் இந்துக் கல்லூரி), திரு. ரி. ரி. ஜெயரத்தினம், (அதிபர் மகாஜன கல்லூரி), திரு. ஈ. மகாதேவன் (ஆசிரியர் இந்துக் கல்லூரி), திருமதி வி. ஆறுமுகம், (அதிபர் இந்துமகளிர் கல்லூரி)

**சரித்திர ஊர்வல அமைப்புக் குழு**

தலைவர்: சிவ. எஸ். யூ. சோமசேகரம் (முன்னள் வித்தியாதிபதி) காரியதரிசி: திரு. கா. வைரமுத்து (இளைப்பாறிய உப அதிபர் வைத்தீஸ்வரவித்தியாலயம்) நிர்வாகக்குழு: திரு. சி. எஸ். நவரத்தினம், திரு. S. மாணிக்கம் (தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர்), திரு. எஸ். பத்மநாதன் (சுப்ரீண்டன்டிங் என்ஜினியரிங்), திரு. ஈ. மகாதேவன், (ஆசிரியர் இந்துக்கல்லூரி) திரு. கே. கனகரத்தினம், ஜே. பி., திருமதி ஞானி குலேந்திரன், திரு. மு. சிற்றம்பலம், (வர்த்தகர் வேலணை.), திரு. கனக சபாபதி (சித்திர விரிவுரையாளர் பலாலி பயிற்சிக் கல்லூரி), திரு. தம்பித்துரை (சித்திரப் பரிசேசகதகர்), திரு. சிவப்பிரகாசம் (சித்திர ஆசிரியர் மத்திய கல்லூரி.)

**போட்டி அமைப்புக் குழு**

தலைவர்: செல்வி எம். தம்பையா, (அதிபர் வேம்படி மகளிர் கல்லூரி) காரியதரிசி: திரு. எஸ், எம். கோபாலரத்தினம் (செய்தி ஆசிரியர் ஈழநாடு) நிருவாகக் குழு: திரு. எம். எம் எஸ். குத்தூர்ஸ் (அதிபர் ஒஸ்மானியாக் கல்லூரி) திரு. ஏ. ஈ. சம்பர் (இளைப்பாறிய அதிபர் மத்திய கலலூரி) திருமதி வி. ஆறுமுகம் (அதிபர் இந்து மகளிர் கலலூரி)

திரு. வி. கந்தையா பேசுகையில் திரு. ஜேசுதாசன் பொறுமையின் இருப்பிடம் என்றும் பல நல்ல காரியங்களை இதன் மூலம் சாதித்தார் என்றும் கூறினர்.

திரு. எஸ். ராதாகிருஷ்ணன் பேசுகையில் திரு. ஜேசுதாசன் தமது பண்பான சேவையால் பலரையும் கவர்ந்து என்றும் மறக்க முடியாதபடி செய்துவிட்டார் என்றும் பலருக்கு அதிக பிரசாரமின்றி உதவியவர் என்றும் தெரிவித்தார்.

-திருவாளர்கள் யு. எஸ், வள்ளிசுந்தரா, தம்பிஐயா, ஈ. சங்கரநமசிவாயம், கே. சுப்பிரமணியம், வி. குமாரசாமி, பஞ்சாட்சரம், எம். எட்வேர்ட் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

திரு. ஜேசுதாசன் தமக்களிக்கப்பட்ட பாராட்டுதல்களுக்கு நன்றி கூறினர்.

திரு. ஜேசுதாசனின் சேவைக்கு தங்கப்பதக்கம் ஒன்று ஊழியர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

— (ந. நி)

## நாகலிங்க சுவாமிகள் விழா

சங்கானை, புதன்

ஸ்ரீலஸ்ரீ தவத்திரு நாகலிங்க சுவாமிகள் குரு பூசை விழா எதிர்வரும் 6-ம் திகதி சங்கானை நிகரை வயிரவர் ஆலய முன்றலில் நடைபெறும். காலை 11 மணிக்கு தவத்திரு நாகலிங்க சுவாமிகள் வாசிகசாலையிலிருந்து அன்னாரின் திருவுருவப்படம் பஜனைக்கோஷ்டியுடன் ஊர்வலமாக எடுத்துச்சென்று வயிரவர் சன்னிதானத்தை அடையும். விசேஷ அபிசேஷக ஆராதனைகளுடன் ஒருமணிக்கு மகேஸ்வர பூசை ஆகியன இடம் பெறும்.

மாலை 6 மணிக்கு முதலியார் செ. சின்னத்தம்பி தலைமையில் விழாநடைபெறும். பண்டிதர் இ. நமசிவாயம் பண்டிதை செ ஜெகதாம்பிகை, திருவாளர்கள்: இ. அப்பாத்துரை, வி. செல்வத்துரை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இன்னிசைக் கச்சேரிகளும் இடம் பெறும்.

திருமலையில் 'டொக்யாட்' வீதி வழியாக ஆஸ்பத்திரிக்கு அதிகாலையில் தனிமையாகச் சென்று கொண்டிருந்த ஒரு பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக் கொடியைத் ஒருவன் அறுத்துக் கொண்டு ஓடியதாகப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் புலன் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

தொழிற்சாலை ஒன்றிற்கு காவல்காரர்கள் தேவை. ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. ஏப்ரல் 4ந் திகதிக்கும் 6ந் திகதிக்கும் இடையில் நேரில் விண்ணப்பிக்கவும். எல்பிஹௌஸ் ஹவுஸ், தெல்லிப்பளை. 811

### விற்பனைக்கு

சகல வியாதிகளும் தடுக்கப்பெற்ற நான்கு மாத அரசாங்க பண்ணை கலப்புக் கோழிக்குஞ்சுகள் (R.O.W) ஏப்ரில் 5, 7, 9ந் திகதிகளில் விற்பனையாக இருக்கின்றன. சோடி ரூபா 9/- பேட்டுக்குஞ்சு ரூபா 6/-, சேவல் குஞ்சு ரூபா 3/50. திருமதி இ. சோமசுந்தரம் (ரட்மண் கோழிப்பண்ணை ஆராய்ச்சி நிலையம்) "கலா நிலையம்" சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு. 901

யாழ்ப்பாணம் ஒட்டுமடம் சந்தியில் இ. போ. ச. டிப்போவிற்கு எதிராக 2 பரப்பு கட்டித்துண்டு உண்டு. எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். எஸ். கதிர்காமலிங்கம், வழக்கறிஞர் அன்ட் நொத்தாரிசு, 381, டாம் வீதி, கொழும்பு. தொலைபேசி: காரியாலயம் 22389. இருப்பிடம்: கல்கிசை 7531 903


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 3-4-69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 51 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 தேர்ந்த இசை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 'பெரிய வெள்ளி' விசேஷ சித்திரம், 6-30 விளையாட்டு விமர்சனம், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச் சுருள், 9-45 நாகசுரம்- கே. பி. நாகமாணிக்கம்.


### கல்வி

ஜி. சி. ஈ. சாதாரணம்/ உயர்தரம் - கலை / விஞ்ஞானம்/ வர்த்தகம்/ மனையியல். ஜி. ஏ. கியூ., சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், விசேஷ ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு காலை வகுப்புகள் நடைபெறுகின்றன. தாமதமின்றி விண்ணப்பிக்கவும். யூனிட்டெட் பெண்கள் கல்லூரி, 107, பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 810

### நன்றி நவிலல்

23-3-69 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற எங்கள் திருமண வைபவத்திற்குச் சமூகம் தந்தவர்களுக்கும், பரிசுகள் தந்தவர்களுக்கும், வாழ்த்துப்பத்திரம், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

செ. சுப்பிரமணியம்
யோகேஸ்வரி.

156, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1501

S. R. S.
ஜவுளி மாளிகையின்
புத்தாண்டு
மலிவு விற்பனை


## வவனியா ஐக்கிய விளையாட்டுக்கழகபோட்டிகள்

### சைக்கிள் ஓட்ட வீரருக்கு நகரசபையின் பரிசு

வவுனியா, புதன்

வவுனியா ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினரால் 10-வது விளையாட்டுவிழா புதுவருடத் தினத்தன்று நடைபெறவிருக்கின்றது. முக்கிய நிகழ்ச்சியாக 45 மைல் மரதன் சைக்கிள் ஓட்டப்போட்டி, 5 மைல் மாணவர் சைக்கிள் ஓட்டப் போட்டி, 2 மைல் பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டியும் 24 இதர நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

45 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாவது பரிசாக ஒரு 'றலி'' சைக்கிளை வவுனியா நகரசபை அளித்துள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்றுபவர்கள் வவுனியா மாவட்டத்தில் வசிப்பவராக இருக்கவேண்டும். மற்றும் பரிசில்களை பிறவுண் அன் கொம்பனி, லிப்டன் தேயிலை கொம்பனி, கொழும்பு கொமேஷல் கொம்பனி, மற்றும் வர்த்தக பிரமுகர்கள், பெருமக்கள், பொதுமக்களால் அளிக்கப்பட்டு வருகின்றன. 45 மைல் மரதன் சைக்கிள் ஓட்டப் போட்டியை வவுனியா பொலிஸ் அதிபர் திரு. ஆர் இராமநாதன் ஆரம்பித்து வைப்பார்.

விளையாட்டுப்போட்டியை வவுனியா நகரசபைத் தலைவர் திரு. எம் பொன்னையா ஆரம்பித்துவைக்க கழகக் கொடியை கழகத் தலைவர் திரு. மு. நடராசா ஏற்றிவைப்பார். பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு பி. சீ. பெரேராவும் அவரது பாரியாரும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். பரிசில்களை வவுனியா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் வழங்குவார். இவ்விழாவிற்கு வவுனியா மாவட்ட விளையாட்டுச்சங்கத் தலைவர் திரு என். பூரணலிங்கமும், கூட்டுறவுசங்கங்களும், கிராமச் சங்கங்களும் ஆதரவளிக்க முன்வந்திருக்கின்றன. விளையாட்டுநிகழ்ச்சிகளின் பின் கலை, கதம்ப நிகழ்ச்சிகள் வவுனியாவைச்சேர்ந்த கழகங்களினால் அளிக்கப்படவிருக்கின்றன.

இவ்விழா இவ்விளையாட்டுக்கழகத்தின் 10-வது விழாவாக இருப்பதால் அதைக் கொண்டாடுமுகமாக ஓர் நினைவுமலர் வெளியிடப்படவிருககின்றது.

## ஞானப்பிரகாசர் குருபூசை

உடுப்பிட்டி, புதன்

யாழ்ப்பாணம் சைவமுன்னேற்றக்கழக ஆதரவில் திருநெல்வேலிபரஸ்மேவராசந்திவிநாயகர் ஆலயத்தில் ஞானப்பிரகாசர் குருபூசை சிறப்பாக நடைபெற்றது.

முதலியார் முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில்யாழ்ப்பாணம் உதவிமேயர் திரு. கே. துரைராஜசிங்கம், திரு. தா. சங்கரப்பிள்ளை, சைவபரிபாலன சபைத்தொண்டர் திரு. அப்பாக்குட்டி, திரு. எஸ். சிவஞானம், ஆசிரியர் திரு, சிவராமலிங்கம' திரு. சம்பந்தர், திரு. மகாதேவன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## ரயிலில் திருட்டு

அளவெட்டி, புதன்

ரயில் பெட்டிகளில் பொருத்தப்பட்டிருந்த பைப்புகள் களவாடப் பட்டுவிட்டனவாம்.

மாவிட்டபுரத்துக்கும் காங்கேசன்துறைக்கு இடையில் நிறுத்தப்பட்டிருந்த பொருட்கள் கொண்டுசெல்லும்ரயில்பெட்டிகளில் இணைக்கப்பட்டிருந்த தண்ணீர் பைப்புகளை யாரோ இனந்தெரியாதவர்கள் களவாடிச் சென்று விட்டதாக காங்கேசன்துறை பொலிசில் காங்கேசன்துறைப் புகையிரத அதிகாரி புகார் செய்துள்ளார் காங்கேசன்துறை பொலிஸார் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## தேர்தல் ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, புதன்

வருகிற மாதம் நடைபெறவிருந்த புதுக்குடியிருப்புக் கிராமசபைத் தேர்தல், உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவின்பேரில் ரத்து செய்யப்பட்டு மேற்படி


மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி


## கந்தபுராண யுத்தகாண்ட உரை

சுழிபுரம், புதன்

சுழிபுரம் யோகி க. கார்த்திகேசுவால் கந்தபுராணம் யுத்தகாண்டத்துக்கு உரை எழுதப்பட்டுள்ளது. அதனை அச்சிட்டு வெளியிடும் பணியைக் கொழும்புத் துறை ஆசிரிய கல்லூரி இந்து மாமன்றத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

நூலாக வெளியிடும் பணிக்கு ரூபா 8,000 தேவை எனவும் நூல் பிரதி ரூபா பத்து முற்பணமாக கலாசாலை ஆசிரியர்கள் நிதி திரட்டி வருவதாகவும் தெரியவருகிறது.

## தமிழரசுக் கிளை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். மாநகரசபையின் பதினான்காம், பதினேழாம் வட்டாரத்துக்குரிய தமிழரக்கட்சியின் கிளை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் திரு. ஜி. பி. வின்சென்ட், தலைவர் திரு. கே. சதாசிவம், உப தலைவர் திரு. எம். எஸ். குணராசா, செயலாளர் திரு. என். சுப்பிரமணியம், உப செயலாளர் திரு கே. சிவராசா, பொருளாளர் திரு. ரி. என். செல்லத்துரை.

ஆறு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் பட்டனர். (ந. நி.)

## தாயும் சேயும் சேர்ந்தனர்

முல்லைத்தீவு, புதன்

சுமார் 20 நாட்களாகத் தேடப்பட்டுவந்த தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற புண்ணியமூர்த்தியின் 13 வயது மகனை இளையதம்பி என்பவர் முருகண்டி கோவில் வீதியில் கற்பூரம் விற்பனை செய்துகொண்டிருந்தபோது நமது முல்லைத்தீவு நிருபர் திரு. சு. பொன்னுசுவாமியினால் அடையாளம் காணப்பட்டு அவர் தாயிடம் ஒப்படைக்கப்பட்டார். பிரிவால் துயருற்றதாயார் நமது நிருபருக்கு நன்றிகூறினார்.

## இடமாற்றம ரத்து

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருந்த சார்ஜன்ட் சண்முகராசா முல்லைத்தீவுப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜி. என். ஆர் ஜோசேப் யாழ்ப்பாணப்

# கோடரியுடன் என்னை நோக்கி வந்ததும் பணியாளன் சுட்டார்

## வசாவிளான் கொலை வழக்கில் எதிரியின் வாக்கு - மூலம்

குரும்பசிட்டி, புதன்

வசாவிளான் கொலை வழக்குமல்லாகம்மாஜிஸ்டிரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில்திங்கட்கிழமை தொடர்ந்து விசாரணைககு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரசிகியூசன் தரப்பு விசாரணை பூர்த்தியடைந்துவிட்டதாக இத் ரப்பில் ஆஜராகிய வழக்கறிஞர் சு. நடராசா நீதவானிடம் தெரிவித்தார். இதனையடுத்து எதிரி வாக்குமூலமளிக்க விரும்புவதாகத் தெரிவித்ததின் பேரில் அவரின் வாக்குமூலத்தை நீதவான் பதிவு செய்துகொண்டார்.

எதிரியாகக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்த வசாவிளானைச் சேர்ந்த கே வி. சுப்பிரமணியம் தனது வாக்குமூலத்திற் கூறியதாவது: சம்பவ தினத்தன்று மாலை 4-30 அல்லது 5மணியளவில் நான் எனது ஹோட்டலில் கடைசி அறையில் படுத்திருந்தேன் காலஞ்சென்ற அட்வக்கேட்டும் முன்னாள் முடிக்குரிய வழக்கறிஞருமான திரு. சிவசுப்பிரமணியம் நான் படுத்திருந்த அறைக்கு அடுத்துள்ள அறையில் அவ்வேளைபடுத்திருந்தார். அந்நேரம் ஹோட்டலின்வெளிப்புறத்தில் பலத்த ஓசை எழுந்ததினால் நான் எழுந்து ஹோட்டலின் முன் விறாந்தைக்குச் சென்றேன். ஹோட்டலின் முன்புறத்தில் காலஞ்சென்றவர் கோடரி ஒன்றுடன் நின்றுகொண்டிருப்பதனையும் எனது பணியாளன் தியாகராசா எனது துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருப்பதனையும் கண்டேன் 'தூஷண வார்த்தையைக் குறிப்பிட்டு வெளியே வாடா' என்று காலஞ்சென்றவர் என்னைப் பார்த்துக் கூறினார். அவர்கோடரியால் தாக்கப்போவதாக பயமுறுத்தி கோடரியுடன் என்னை நோக்கி வரத் தொடங்கினர். அந்நேரம் தியாகராசா இறந்தவரை நோக்கித் துப்பாக்கியாற் சுட்டார். இவ்வேளை திரு. சிவசுப்பிரமணியம் முன் விறாந்தைக்கு வந்து என்ன நடந்தது என்பது பற்றி விசாரித்தார். என்னை (எதிரியை) இறந்தவர் கோடரியால் தாக்க வந்ததால்தான் அவரைச்சுட்டதாகத் தியாக

மான காணியில் கொக்குவிலைச்சேர்ந்தவர்கள் கல்நெரிக்கும் இயந்திரம் ஒன்றை இயக்கிவருகின்றனர். இத் தொழிற்சாலைக்குக் காவலாளியாக கந்தையா என்பவர் கடமையாற்றி வந்தார். இவர் தவருக நடந்து கொண்ட ஒரு சம்பவத்தையிட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். முத்தையா என்பவர் காணியில் உள்ள கல் நெரிக்கும் இயந்திர சாலையில் காவலாளியாகக் கடமையாற்றிய காலஞ் சென்றவரை குறிப்பிட்ட தொழிற் சாலையையும் காவல் செய்யும்படி கோரியதற்கிணங்க இரண்டையும் காவல் செய்தார். பிரஸ்தாப கந்தையா என்பவர் என்னிடம் வந்து தான் 6 பிள்ளைகளின் தந்தை என்று கூறி தனக்கு மேற்படி காவலாளிப் பதவியை மீண்டும் பெற்றுத் தரும்படிகேட்டார். ஆகவே நான் அவரை அழைத்துக்கொண்டு கொக்குவிலுக்குச் சென்றேன்.

மாத ஆரம்பத்தில்அவரை மீண்டும் குறிப்பிட்ட காவலாளி வேலையிற்சேர்ப்பதாக உரிமையாளர் எனக்குக்கூறினார். இதனை இறந்தவரும் அறிந்திருக்கக் கூடும். இவற்ருல் இறந்தவர் என்மீது மனஸ்தாபம் கொண்டிருக்கலாம்.

### இருந்திருந்தால் இங்கு கூறியிருப்பார்

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில்சம்பவவேளை கடமையாற்றிய சில பொலிஸ் அதிகாரிகளுக்கும் எனக்குமிடையே மனக் கசப்பு இருந்தது. காலஞ்சென்ற திரு. சிவசுப்பிரமணியம் இன்று இருந்திருந்தால் உண்மையில் நடந்த சம்பவம் பற்றி நீதிமன்றத்தில் கூறியிருப்பார். எதிரியின் வாக்குமூலத்தையடுத்து எதிரி தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் ரி. டபிள்யு. இராஜரத்தினம் எதிரி தரப்பில் வேறும் சாட்சிகளை அழைக்க விருப்பதாக கூறியதைத் தொடர்ந்து மேல் விசாரணையை மாஜிஸ்ரேட் இம்மாதம் 11-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## பிரிவுபசாரம்

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியா.

உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் அகிலஇலங்கை இசைத்தமிழ் நிலையத்தின் இசைவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் இன்று வியாழக்கிழமை நியாயவாதி திரு சதா. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்ருர்.

விழா நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:-

மாலை 6-00 மணி மங்கள இசை, 7-30 மணி: பண்ணிசை பாட்டு திரு எஸ். இராசையா, திரு. ஆர் திருஞானசம்பந்தர், 8-00 மணி முகவீணை பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, 8-30மணி தலைவர் பேச்சு, 8-45 மணி பாட்டு, திரு. என். கந்தசாமி, 9-30 மணி நடனம், இணுவில் இசைநடன கிராமிய கலைக்கல்லூரி, 9-45 மணி பிரதம விருந்தினர் உரை, 10-00 மணி பாட்டு. பொ. புஷ்பரத்தினம், 10-45 மணி பாட்டு செல்வி சந்திரலோஜனி -சிவஞானம், 11-30 மணி நாடகம் 'சுந்தரமூர்த்தி நாயனர்' யாழ். நாடக வட்டம்.

(குரு நிரு.)

## மாணவிகள் சுற்றுலா

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை சென். ஜேம்ஸ் நெசவு நிலையத்தைச் சேர்ந்த மாணவிகள் பலாலி விமானநிலையம், தோலகட்டி செபமாலைத் தாசர் ஆச்சிரமம், சீமெந்துத் தொழிற்சாலை, கைதடி குருடர் செவிடர் பாடசாலை ஆகிய இடங்களுக்கும் சென்று பார்வையிட்டனர். நெசவுநிலைய ஆசிரியை செல்வி மகேஸ்வரி தலைமையில் இச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.

## பயிற்சி

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

S. R. S.

ஜவுளி மாளிகையின்

புத்தாண்டு

# மலிவு விற்பனை

(1-4-69—13-4-69)

சேலைகள்:

லங்கா மணிப்புரி, டெக்ரேன், நயிலெக்ஸ், டிப்ளோமா கைத்தறி, மின்தறி பிடவைகள் பலவிதமான போடர்களில் பிரோன் அன் பிரின்டட் வோயில் சாறிகள் மற்றும் S. R. S. நெசவு நிலையத்தயாரிப்புகள்

வேட்டிகள்:

பட்டு, பருத்தி வேட்டிகள், சால்வைகள், லங்கா வேட்டி சால்வைகள், கைத்தறி வேட்டிகள் 4 முழ வேட்டிகள் மற்றும் எல்லா வகையான

ஜவுளி வகைகளும்

றெடிமேற் உடுப்புகளும்

எஸ். ஆர் செல்லத்துரை

216, கே. கே. எஸ். ரோட் யாழ்ப்பாணம்.

போன்: 296



3-வது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல் பிளாஸா ஸ்ரீ கிருஷ்ணு

(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருமலை)

மற்றும் சினிமாஸ் திரைகளில்

எஸ். வி. ரங்கராவ், பானுமதி

முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,

நாகேஷ் நடித்த


வாசு பிலிம்ஸ் அளிக்கும்

## பூவும் பொட்டும்

டைரக்ஷன்: தாதாமிராசி

6-வது வாரம்

வெலிங்டன் (யாழ் நகரில்)



சிவாஜி, விஜயா,

முத்துராமன்,

எல். விஜயலக்ஷ்மி,

நாகேஷ், குமாரிசச்சு

இன்னும் பலர் நடித்த

ஸ்ரீதரின்

ஊட்டி வரை உறவு

(ஈஸ்ட்மென் கலர்)

கிங்ஸ்லி (கொழும்பு)

சிவாஜி ★ சாவித்திரி ★ தேவிகா

நடித்த

## சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென்கலர்)


கலை, கதம்ப நிகழ்ச்சிகள் வவுனியாவைச் சேர்ந்த கழகங்களினுல் அளிக்கப்பட


மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30 மணி

ராஜேந்திரன்-விஜயகுமாரி

நடித்த

நானும் ஒரு பெண்

இணுவில்

ஸ்ரீ காலிங்கன்

தினசரி: 6-30, 9-30

போயா 2-30

ஜெய்சங்கர் ஜெயலலிதா

நடித்த

யார் நீ

ராஜா 80வது தினம்

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா

நடித்த

ஒளிவிளக்கு

(ஈஸ்ட்மென் கலர்)

மாதர்கள்

அரைக்கட்டணத்துடன்

அனுமதிக்கப்படுவர்

வின்ஸர்

(யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

முத்துராமன், ராஜ்ஸ்ரீ

நடித்த

அனுபவி ராஜா அனுபவி

ராணி

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, & 9-45

சிவாஜி - பானுமதி

நடித்த

மணமகன் தேவை

MANOHARA

JAFFNA

Daily 4-45, 7 & 9-45p.m

Poya Pre Poya 10-30 a.m

Frank Sinatra

in

THE NAKED RUNNER

(Spy Film)

REGAL at Jaffna

Daily4-45, 7 & 9-45 p.m

Anthony Quinn

Silvana Mangano

in

BARABBAS

யேசுவின்

சரிதத்தை தழுவியது


## ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, புதன்

வருகிற மாதம் நடைபெறவிருந்த புதுக்குடியிருப்புக் கிராமசபைத் தேர்தல், உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவின்பேரில் ரத்துச் செய்யப்பட்டு மேற்படி கிராமசபையின் பதவிக்காலம் இவ்வருடம் டிசம்பர் 31ந் தேதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய பலன்

3-4-69

வியாழக்கிழமை

திதி- பிரதமை இரவு 11-32 மேல் துதியை.

நட்சத்திரம்- அத்தம் காலை 7-23 மேல் சித்திரை.

ராகுகாலம்- 1-41 - 3-11.

சுபநேரம்- 7-41 — 9-11.

இன்று பிறந்தவர்களுக்கு- வாகனவிருத்தியும், வரவிலும் திருப்தி இனசன மகிழ்ச்சி, பொன் பொருள் சிறப்பு கல்வி நலன் தரும் காதலர் வாழ்வில் கழிப்பு மிகுதியும். கைத்தொழில் புரிவோர்க்கு இவ்வாண்டு நல்லாண்டாகும்.

மேஷம்- ஊக்கமின்மை உயர்வில் தாமதம்.

ரிஷிபம்- குரு விசுவாசம். குறிக்கோள் வெற்றி.

மிதுனம்- பயணத்திற்கேற்பாடு முயற்சி பலிதம்.

கடகம்-வரவில் திருப்தி வாழ்க்கைச்சுகம்.

சிம்மம்- எதிர்பாராத விளைவு, ஏமாற்றம்உண்டு.

கன்னி- பிணக்குவரும், பிரிவுக்கு இடமுண்டு.

துலாம்- பேச்சுவன்மை பெரும்புகழ் உண்டு.

விருச்சிகம்- இரும்பு மனம், இருண்டவாழ்வு.

தனுசு- மாதுருவழி மகிழ்ச்சி மாண்புடன் வாழ்தல்.

மகரம்-பாக்கியவிருத்தி பகைவர் பணிவர்.

கும்பம்- பகைமை சிறும், சிக்கலைத் தவிர்.

மீனம்- களஸ்திரசுகம், கண்ணியம் சேரும்.

—சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவுப் பொலிஸ் நிலயத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருந்த சார்ஜண்ட் சண்முகராசா முல்லைத்தீவுப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜி. என். ஆர் யோசேப், யாழ்ப்பாணப் பொலிஸ் சுப்ரிண்டனிடம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மீண்டும் இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## நிவாரண ஏற்பாடு

முல்லைத்தீவு புதன்

முல்லைத்தீவுப் பகுதியில் நிலவும் கொடூரமான வரட்சி காரணமாகக் குளம் குட்டைகள் யாவும் வரண்டு காட்சியளிப்பதுடன் கிணறுகளும் வற்றிக்கொண்டு போகின்றன.

கால்நடைகள் தண்ணீரின்றிக் கஷ்டமடைகின்றன. மக்களுக்கு நிவாரண வேலைகள் கொடுக்க வவுனியா மாவட்ட அதிபர் திரு. வீ. சீ. பெரேரா ஏற்பாடுகள் செய்துவருகின்றார்.

## சாம்பியா செல்கிறர்

சுழிபுரம், புதன்

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கடந்த 14ஆண்டுகள்பணிபுரிந்த உதவி அதிபர் திரு. வி. இ. நிக்கலாஸ் உயர் பதவியொன்று ஏற்க சாம்பியா செல்கின்றார். அவரின்சேவையைப் பாராட்டி ஓர் பிரிவுபசார விழா இம்மாத பிற்பகுதியில் கலாசாலை புதிய பழைய மாணவர்களால் நடாத்தப்படவிருக்கின்றது.

## கடத்தல்

வவுனியா, புதன்

வவுனியாவிலிருந்துயாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸில் 40 போத்தல் சாராயம் கடத்த முயற்சித்த தாக கனகசபை என்பவரை பொலிஸார் கைது செய்தனர். வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த திரு. போல், திரு. வேலாயுதபிள்ளை ஆகியோர் இவரைக் கைது செய்தனர்.

## மஞ்சம் தேராகியது

சுழிபுரம், புதன்

மூளாய் முருகமூர்த்தி கோவில் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. வழமையாக இழுக்கும் தேர் பழுதடைந்த நிலையில் இருந்ததால் பொன்னாலைக் கோவிலில் மார்கழி தீர்த்தத் திருவிழா அன்று பயன்படுத்தப்படும் மஞ்சம் தேராகப் பயன்படுத்தப்பட்டது.

நோக்கித் துப்பாக்கியொற் சுட்டார். இவ்வேளை திரு. சிவசுப்பிரமணியம் முன் விருந்தைக்கு வந்து என்ன நடந்தது என்பது பற்றி விசாரித்தார். என்னை (எதிரியை) இறந்தவர் கோடரியால் தாக்க வந்ததால்தான் அவரைச்சுட்டதாகத் தியாகராசா சிவசுப்பிரமணியத்திடம் தெரிவித்தார். பின் சிவசுப்பிரமணியம் இறந்தவரைச் சென்று அண்மித்தார். இறந்தவர் அருகில் நிற்கக் காணப்பட்ட ஓர் பெண் இறந்தவரைத் தொடவேண்டாமென்றும்அப்பால்போகுமாறும் ஏசினர். அப்போது சிவசுப்பிரமணியம் தியாகராசனை அழைத்து இறந்தவர் கொண்டுவந்த குறிப்பிட்ட கோடரியை உள்ளே கொண்டுவந்து வைக்குமாறு சொன்னர். தியாகராசனும் அப்படியே செய்தார்.

### கடன் தரவேண்டும்

இறந்தவருக்கும் எனக்குமிடையே எவ்விதமான மனஸ்தாபமும் கிடையாது. இறந்தவர் எனது ஹோட்டலில் 45-50 ரூபாவிற்கு மதுபானம் கடனுகக் குடித்துள்ளார். கடனைச் செலுத்தும் வரை இறந்தவருக்கு குடிவகை கொடுக்கவேண்டாமெனத் தெரிவித்திருந்தேன் எனதுஹோட்டலுக்கு அடுத்துள்ள எனக்குச் சொந்த

## கைகலப்பு

அளவெட்டி, புதன்

எனக்கெதிராக சாட்சியமளிக்கப் போகிருயா? எனக் கேட்டுசந்தியில் நின்றவரை தாக்க முற்பட்ட ஒருவர் சந்தியில் நின்றவரால் நையப்புடைக்கப்பட்டாராம். இச்சம்பவம் தெல்லிப்பளை சந்தியில் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

தெல்லிப்பளையைச் சேர்ந்த செல்லப்பாசண்முகவடிவேல் என்பவர் தெல்லிப்பளைச் சந்தியில் நிற்கையில் பஸ்ஸிலிருந்து இறங்கிவந்த சிறீஸ்கந்தராசா என்பவர் வழக்கில் எனக்கெதிராக சாட்சியமளிக்கப்போகிருயா? எனக்கேட்டு அவரைத் தாக்க முற்பட்டாராம்.

பின் இவர் மேற்படி நபரால் நையப்புடைக்கப்பட்டாராம். இக்கைகலப்பின் போது கைக்கடிகாரம் உட்பட மற்றும் சில பொருள்களும் காணுமல் போய்விட்டதாகச்சொல்லப்படுகிறது.

இது சம்பந்தமாக செல்லப்பா சண்முகவடிவேல் என்பவர் காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதுபற்றி காங்கேசன்துறை பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

வேறும் சாட்சிகளை அழைக்க விருப்பதாக கூறியதைத் தொடர்ந்து மேல் விசாரணையை மாஜிஸ்ரேட் இம்மாதம் 11-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றி மாத்தறை மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றலாகிச் செல்லும் திருமதி எஸ். இராசலிங்கத்துக்கு கல்லூரி ஆசிரிய மன்றத்தினரால் ஒரு பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

டர் செவிடர் பாடசாலை ஆகிய இடங்களுக்கும் சென்று பார்வையிட்டனர். நெசவுநிலைய ஆசிரியை செல்வி மகேஸ்வரி தலைமையில் இச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.

## பயிற்சி

குரும்பசிட்டி, புதன்

பட்டின-கிராமசபை உத்தியோக ஊழியர்களுக்கு உள்ளூராட்சி அமைச்சு இம்மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் இரு தினங்களுக்கு யாழ்ப்பாணம் அரசாங்க செயலக ஆலோசனை மண்டபத்தில் பயிற்சி வகுப்பு நடாத்தவிருக்கின்றது.


ரவி என்ருல்...

..."சரி"



ரவி பிரஷ்களுள் நிலையான பெயர்.

உறுதியற்ற சிலிர்க்கும் முடிகள்

சுவர்களைக் களங்கப் படுத்தும் கோடுகள்

நிந்தையை விணடித்தல்

இவை ரவி பிரஷ்களில் இல்லை.

ரவி பிரஷ் வாங்கும் போது நீங்கள் பூரண நம்பிக்கை அடையலாம். காரணம் ரவி நிந்தை பிரஷ்கள் இறக்குமதி செய்யப்பட்ட சுத்தமான முடிகளைக் கொண்டு செய்து அவற்றின் தரமும் நீண்ட சேவையும் உறுதிப்படுத்தும் விதம் பரிசோதிக்கப் படுகின்றன.

நீங்கள் அடுத்த முறை நிந்தை பிரஷ்கள் வாங்கும்போது பிடியில் ரவி என்ற பெயர் இருக்கிறதா எனப்பார்த்து வாங்குங்கள்.

அதுவே தரத்தின் உத்தரவாதம்

சகல தேவைக்கும் ஒரு ரவி பிரஷ் உண்டு.

இவற்றின் வகைகளைக் காணப் உங்கள் வியாபாரியைக் கேளுங்கள்.

ரவி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

RI-2-68-MASTERS

### அரபு பொதுமக்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தினுல்

# இஸ்ரேல் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படலாம்

## அண்மைச்சம்பவம் பற்றி பாதுகாப்புசபை கண்டனம்

வாஷிங்டன், ஏப். 2

**இஸ்ரேலியர் கடந்த வாரம் ஜோர்டானில் பொதுமக்கள் வாழும் கிராமம் ஒன்றின்மீது விமானத்திலிருந்து குண்டுகளை விசி நாசம் விளைவித்ததை ஐ. நா. பாதுகாப்புசபை நேற்றிரவு கண்டித்தது.**

இஸ்ரேலிய விமானத் தாக்குதலைக் கண்டிக்கும் தீர்மானம் நேற்றிரவு பாதுகாப்புச்சபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை ரஷ்யாவும் பிரான்சும் ஆதரித்து வாக்களித்த அதே நேரம் பிரிட்டனும் அமெரிக்காவும் தீர்மானத்தின்மீது வாக்களிக்காமல் நடுநிலைமைவகித்தன.

கடந்தவாரம் இஸ்ரேலிய விமானங்கள் ஜோர்டான் கிராமமொன்றில் குண்டுகளை வீசியதில் 21 பேர் கொல்லப்பட்டார்கள். பலர் படுகாயமடைந்தார்கள். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து பந்தோபஸ்து சபையில் பாகிஸ்தான், சாம்பியா, கினிகல், ஆசிய நாடுகள் ஒரு தீர்மானத்தைத் தாக்கல் செய்தன. இந்தத் தீர்மானத்தின் மீது முன்னர் பேசிய அமெரிக்க, பிரெஞ்சுநாட்டுப் பிரதிநிதிகள் இஸ்ரேலியரின் நடவடிக்கைகளைக் கண்டித்தனர். போர்நிறுத்த உடன்பாடுகளை மீறும் எல்லா நாடுகளையுமே தாம் கண்டிப்பதாக அமெரிக்கப் பிரதிநிதி கூறினுர்.

நேற்றிரவு தீர்மானம் வாக்குக்கு விடப்பட்ட போது அமெரிக்காவும் பிரிட்டனும் வாக்களிக்காமல் இருந்தன. ஆனுல் தீர்மானம் நிறைவேறியது. இத்தீர்மானம் போர்நிறுத்த உடன்பாடுகளை மீறும் அரபு நாடுகளையும் கண்டிக்காததால் தாம் அதனை ஆதரிக்கவில்லையென்று அமெரிக்காவும் பிரிட்டனும் அறிவித்தன. அமெரிக்க, பிரிட்டிஷ் அரசுகளின் இந்தப் போக்கை ஜோர்டான் பிரதிநிதி கண்டித்துப் பேசினுர். இஸ்ரேலிய தாக்குதலுக்கு எதிராக அரபு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறும் என்று அவர் குறிப்பிட்டார். ஜோர்டான்மீது விமானத் தாக்குதல் நடத்தியதைப் பாதுகாப்புசபை கண்டித்த அதே சமயம் இம்மாதிரி நடவடிக்கை மீண்டும் நடைபெற்றுல் பொருளாதாரத் தடை ஒழிக்கப்படவேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறியிருக்கின்றன. பாகிஸ்தான், சினிகல், சாம்பியா ஆகிய நாடுகள் இந்தத் தீர்மானத்தைத் தாக்கல் செய்தன.

### பாரிசில் ஜோர்டான் மன்னர்

ஜோர்டான் மன்னர் அமெரிக்கா செல்லும் வழியில் பிரஞ்சுத் தலைநகரான பாரிஸ் போய்ச் சேர்ந்துள்ளார். அமெரிக்க அதிபர் நிக்ஸனுடன் ஆலோசனைகள் நடத்துவதற்கு முன்னர் மன்னர் ஹுசேன் பிரஞ்சு அதிபர் டிகாலேயும் சந்தித்துப் பேசவிருக்கிறுர்.

விரைவில் இடம்பெறவிருக்கும் நான்கு வல்லரசு மகாநாடு மேற்காசிய நிலைமைக்கு நியாயமான ஒரு தீர்வு ஏற்பட உதவும் என்று தாம் நம்புவதாக மன்னர் பாரிசில் கூறினுர்.

### திருமதி மெயர் பிடிவாதம்

நான்கு வல்லரசு மகாநாடு மேற்காசிய நிலைமைக்கு முடிவு காண முடியாது என்றும் எந்தத் தீர்மானத்தையும் இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளாது என்றும் இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் கூறியிருக்கிறுர்.

# 'பாரிஜாதமலரை தமிழ்நாடு கேட்கவில்லை'

## சீன கம்யூனிஸ்ட் மாநாடு ஆரம்பம்

ஹாங்காங் எப். 2

சீனக் கம்யூனிஸ்ட்கட்சியின் 9 வது மாநாடு பீகிங்கில் ஆரம்பமாகியிருக்கிறது.

இம் மகாநாடு திடீரென ஆரம்பமானது மாஸ்கோவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறதாம் மகாநாட்டுக்கு ரஷ்யா அழைக்கப்படவில்லையென்றும் கூறப்படுகின்றது.

சீனக்கம்யூனிஸ்ட்கட்சியின் அமைப்புத்திட்டம் இந்த மகாநாட்டில் திருத்தி அமைக்கப்படும். கம்யூனிஸ்ட்கட்சியின் தலைவராக மா சேதுங்கும் துணைத்தலைவராக மார்ஷல் லிம்பியாவும் காரியதரிசிஜெனரலாகவும் சூ என்லாயும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## ''எரிக்கும் பேர் வழிகளுக்கு இளைஞரே பதிலளிக்கவேண்டும்''

### ஸ்ரீராமபட்டாபிஷேக விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்.

'மன்னன் எப்படி வாழவேண்டும், மக்கள் எப்படி வாழ வேண்டும், பெண்கள் எப்படி வாழ வேண்டும் என ஆண்கள் எப்படி வாழ வேண்டும் வாழ்க்கைக்கே நெறி முறை வகுத்துக்கொடுத்துள்ள கம்பராமாயணக் காப்பியத்தை எரிக்க வேண்டும்' என யாரோ சில அறிவிலிகள் கூறியதாக செய்திகள்வெளிவந்தன. ஒழுக்கம், அறநெறி பற்றி அக்கறை கொள்ளாத இந்த அறிவிலிகளுக்கு நாட்டின் எதிர்கால நலனில் அக்கறையுள்ள இளைஞர்கள் தான் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும் என்று திரு. க. சிவராமலிங்கம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்கோயிலில் நேற்று முன்தினம்இரவுநடைபெற்ற ஸ்ரீ ராம பட்டாபிஷேக விழாவில் கம்பன் கண்ட ஸ்ரீ ராமன் என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றுகையில் கூறினுர்.

கம்ப ராமாயணத்தில் தமிழ்ப் பண்பு ஒவ்வொரு இடத்திலும் விளங்குகிறதென்பதை விரிவாகவும் தெளிவாகவும் எடுத்து விளக்கிய திரு. சிவ ராமலிங்கம் கம்ப ராமாயணத்தை இளைஞர்கள் படித்துச் சுவைத்து இன்புற்றுத் திளைக்கவேண்டுமென்றும் திளைத்த பின் தெளிவு பெற்று அந்த இதிகாசத்துக்கு இழுக்குச் சொல்ல முற்படுவோருக்குத் தக்க பதில் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

வருடாவருடம் பெருமாள் [illegible] நடைபெற்றுவ[illegible] ராமாயணப்படிப் பின்போது ஸ்ரீ ராம பட்டா[illegible]

### உறவினர் வீட்டில் அயூப்

ராவல்பிண்டி, ஏப் 2.

முன்னுள் அதிபர் அயூப்கான் அதிபர் மாளிகையிலிருந்து நேற்று புறப்பட்டுச் சென்றுவிட்டார். அவர் தற்பொழுது தமது உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருப்பதாகத் தெரிகிறது.

ஜெனரல் யாஹ்யாகான் ஜனுதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்ட அதேசமயம் அயூப்கான் அதிபர் மாளிகையைக் காலி செய்திருக்கிறுர்.

ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தபின்னர் மேற்கு பாகிஸ்தானில் குழப்பங்களில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் சுட்டதில்6பேர் கொலையுண்டிருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திரு பார்த்தசாரதி

### துணைவேந்தராக நியமனம்

புதுடில்லி, ஏப் 2.

ஐ. நா. வில் முன்னர் இந்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

## செய்திச் சுருக்கம்

### முஸ்லிம் மகாநாடு

நாளை மாவனல்லையில் நடைபெறும் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் மகாநாட்டில், முஸ்லிம்களுக்கென விவசாயம், தொழில் நுட்பம் போதிக்கும் கனிஷ்ட பல்கலைக்கழகம் வேண்டுமென்றும் குடியேற்றத் திட்டங்களில் முஸ்லிம்களுக்கும் காணி வழங்கவேண்டுமென்றும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நகர்ப்புறங்களின் விசேஷ தொழிற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கோரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருக்கிறது. இஸ்ரேலுடனுள்ள ராஜீய உறவை இலங்கை அரசாங்கம் ரத்துச்செய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானமும் அரபுநாடுகளுக்கு ஆதரவாகவுள்ள அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமும் மகாநாட்டுக்கு வரவிருக்கிறது.

0 0 0

### மந்திரி விஜயம்

மராமத்து மந்திரி திரு. மொண்டேகு ஜயவிக்கிரம கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்திருக்கிறுர்.

0 0 0

### திரும்பினுர்

நாவின்ன பண்டார நாயகா ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையத்தின் நிர்வாகியாகவும் ஆயுள்வேத ஆலோசகராகவும் கடமையாற்றிய இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் ஆர். ஆர். பத்தாக் தாயகம் திரும்பினுர்.

### குருபூசை

யோகர்சுவாமிகளின் குருபூசைத்தினம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெகுவிமரிசையாகக்கொண்டாடப்பட்டது.

0 0 0

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் பிரார்த்தனைக் கோஷ்டியாரின் வாராந்த பஜனை வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

### ரூபா 300 பிணையில்

வல்வெட்டித்துறை, புதன்

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த நவமணி என்ற பெண் கடந்த இரு வாரங்களுக்கு முன் வல்வெட்டித்துறைக்கு இரவு தன்பிள்ளையுடன் வந்திருந்த திருந்த சமயம் வீடொன்றில் பசிக்கு உணவும், படுக்க வசதியும் செய்து கொடுத்தனராம்.

விடியற்காலையில் வீட்டுக்காரர் எழுந்து பார்த்தபோது அப்பெண்ணையும் பிள்ளையையும் அவ்வீட்டில் இருந்த கைக்கடிகாரத்தையும் காணவில்லை என்பது தெரியவந்ததாம். பின் அப்பெண்ணை வவனியாவில் கண்டுவீட்டுக்காரர் வவனியா பொலிசாரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து வவனியாப் பொலிசார் கைதுசெய்து பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிசார் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்திரேட் எதிரியை ரூ. 300 பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டு அடுத்த மாதம் முதலாம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

### ஓய்வு

புன்னலைக்கட்டுவன், புதன்

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி அதிகாரி டாக்டர் எஸ். சோமசுந்தரம் இளைப்பாறி இம்மாதம் தொடக்கம் நெல்லியடியில் ஒரு தனிப்பட்ட வைத்திய சாலையை நிறுவியுள்ளார்.

திருமதி எஸ். தம்பையா, கரவெட்டி நாவலன் பாடசாலை ஆசிரியை, இம்மாத முடிவுடன் இளைப்பாறுகிறுர்.

பேசாலை றோமன் கத்தோலிக்க பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. எஸ். பி. சுவாமிநாதர் இம்மாத முடிவில் ஓய்வுபெறுகிறுர்.

கட்டைவேலி எம். எம். பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. ஏ. கணபதிப்பிள்ளை ஜூன்மாத இறுதியில் இளைப்பாறுகிறுர்.

கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி ஆசிரியர் திரு. ஐ. சிற்றம்பலம்ஜூலைமாதத்துடன் இளைப்பாறுகிறுர்.

வதிரி திருஇருதயக் கல்லூரி ஆசிரியர் திரு. அந்தனிஇராசையா இவ்வாண்டு ஆடிமாதம் இளைப்பாறுகிறுர்.

எழுதுமட்டுவாள் இந்துத் தமிழ்ப் பாடசாலைத்தலைமை ஆசிரியர் திரு. எஸ். கந்தவனம் இவ்வாண்டு இறுதியில் இளைப்பாறுகிறுர்.

### சிறை சென்றனர்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி, பரஞ்சோதி, நடனசிகாமணி, இரத்தினசாமி, தேவராசா, சுந்தரமூர்த்தி இந்திரலிங்கம், சக்திவேல், இலெட்சுமிகாந்தன், பொன்னுத்துரை, திருச்சிற்றம்பலம், புலேந்திரன், சிவஞானசுந்தரம் ஆகிய 13 பேரும் 67ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ந் திகதி வல்வெட்டித்துறைக் கடலில் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாகச் சுங்க இலாகாவினுல் கைதுசெய்து விசாரணை செய்தபின் எதிரிகள் 13 பேருக்கும் தலா ரூ. 2,500 அபராதம் விதிக்கப்பட்டது எதிரிகள் அபராதத் தொகையைக் கட்டத் தவறவே சுங்க இலாகாவினர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் வழக்கொன்றைத் தாக்கல்செய்தனர்.

வழக்கு விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு தலா ரூ. 1,000 அபராதம் அல்லது கட்டத் தவறினுல் ஆறு வாரச் சிறைத் தண்டனை எனத் தீர்ப்பளித்தார். 5, 8, 10ம் எதிரிகளான தேவராசா, சக்திவேல், பொன்னுத்துரை ஆகியோர் அபராதம் செலுத்தாது சிறை சென்றனர்.

அரசாங்க சார்பில் வழக்கறிஞர் திரு. கே. இரத்தின சிங்கம் ஆஜரானுர். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. என். நடராசா, திரு. ஏ. இராசரத்தினம் ஆகியோர் ஆஜரானுர்கள்.

### காவலாளர் தாக்கப்பட்டாராம்

சுழிபுரம், புதன்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் காவலாளராக கடமையாற்றிய ஒருவர் கடமை நேரத்தின்போதே தாக்கப்பட்டாராம்.

இரவு நேரத்தில் நோயாளர் போல நடித்துக் கொண்டு வெளிக்கேற்றை திறக்க முயன்ற ஒருவராலேயே காவலாளர் நன்கு தாக்கப்பட்டாராம். பலத்த காயத்துக்குள்ளான காவலாளர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றுர்.

பொலிஸ் விசாரணையைத் தொடர்ந்து காரைநகரைச் சேர்ந்த இருவர் திட்டமிட்டுச் செய்த வேலைஇது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இவர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# 'பாரிஜாதமலரை தமிழ்நாடு கேட்கவில்லை'

# சட்டசபையில் கருணாநிதி தமாஷ்

சென்னை, ஏப். 2

கிடைக்காத பொருளையெல்லாம் கேட்பதுதான் தி. மு. க. அரசினர் வழக்கம் என்று தமிழ்நாடு சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் குற்றஞ்சாட்டியபோது அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் திரு. கருணாநிதி நாங்கள் ஒன்றும் பாரிஜாதமலரைக் கேட்கவில்லையென்று நகைச்சுவையாக பதிலளித்தார்.

தமிழ்நாட்டின் வரட்சி நிலைமைபற்றி முதலமைச்சர் கருணாநிதி சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதன் மீதான விவாதத்திற்கு பதிலளித்து திரு. கருணாநிதி பேசுகையில் சிரிய கருத்துக்களை எல்லாம் இந்த விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களும் கட்சித் தலைவர்களும் கூறியிருக்கிறார்கள்.

தீர்மானத்தை யொட்டிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் 'முதலில் 1 லட்சம் டன் அரிசி கேட்டீர்கள் பிறகு 3 லட்சம் டன் கேட்டீர்கள். மத்திய உணவு அமைச்சர் இல்லையென்று சொல்லிவிட்டார்' என்பதை மகிழ்ச்சியாக தெரிவித்தார். இதை குறிப்பு எடுக்கிற பத்திரிகை நிருபர்கள் எதிர்க்கட்சித் தலைவரின் வாசகத்தைத் தான் எழுதலாம், அவருடைய முகபாவத்தை எழுத முடியாது என்றார்.

கருத்திருமன்: இதில் எனக்கு ஒன்றும் மகிழ்ச்சி கிடையாது. வருத்தத்தோடுதான் சொன்னேன், உலகத்தில் கிடைக்காத பொருளையெல்லாம் கேட்பது தி. மு. க. அரசின் வழக்கம்.

கருணாநிதி: நாங்கள் ஒன்றும் பாரிஜாத மலரைக் கேட்கவில்லை. புராணகாலத்தில்தான் இப்படிப்பட்ட கிடைக்காத பொருளையெல்லாம் கொண்டுவந்தால்தான் அரசகுமாரியை திருமணம் செய்துவைப்போம் என்பது வழக்கம். நாங்கள் அப்படி யெதுவும் கேட்கவில்லை, தரக்கூடியதைத்தான் தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டிருக்கிறது.

1 லட்சம் டன் கேட்டீர்கள். பிறகு 3 லட்சம் டன் கேட்கிறீர்கள். 2 லட்சம் டன்னை பதுக்கி வைக்கப் போகிறீர்களா? என்று தமிழக அரசை பதுக்கல்காரர்களோடு ஒப்பிட்டுக் கூறியதற்காகநான் மிகவும் வருந்துகிறேன்; தீர்மானம்நிறைவேறியது.

## பம்பாய்த்தமிழர் தாக்கப்பட்ட சம்பவம்

### தமிழ்நாடு சட்டசபையில் விவாதம்

சென்னை, பெப். 2

பம்பாயில் உள்ள தமிழ் மக்களை மகாராஷ்டிர பாதுகாக்கும் என்று தாம் நம்புவதாக தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறினார்.

திரு. கோமதி சங்கர தீட்சிதர் திரு. மா. பா. சாரதி ஆகிய இருவரின் மூலக்கேள்விகளுக்கு முதலமைச்சர் பதிலளிக்கையில், பம்பாயில் உள்ள தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து மகாராஷ்டிர முதலமைச்சருக்கு 1969 பெப்ரவரி 17-ம் திகதி தாம் கடிதம் எழுதியதாகக் கூறினார்.

திரு. தீட்சிதர்: சிவசேனை அட்டூழியத்தினால் சேதமடைந்த தமிழர் சொத்துகளின் மதிப்பு எவ்வளவு? அவர்களுக்கு நஷ்டஈடுதர மகாராஷ்டிர அரசாங்கம் ஒப்புக்கொண்டதா?

முதல்வர்: அந்தச் சம்பவங்களினால் ஏற்பட்டசேதங்களின் மொத்த மதிப்பு ரூ. 4 கோடி முதல் ரூ. 5 கோடி வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் தமிழர்களின் உடமைகளுக்கு ஏற்பட்ட சேதம் பற்றிய தனி விவரம் கிடைக்கவில்லை. நஷ்டஈடு தருவதாக மகாராஷ்டிர அரசாங்கம் கூறவில்லை.

ராமச்சந்திரன்: பம்பாயிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் தமிழர்கள் விரட்டியடிக்கப்படுகிறார்களே. அப்படியானால் தேசிய ஒருமைப்பாடு என்பது தமிழர்கள் ''ஜனகணமன'' கீதம் பாடுவதற்காக மட்டும்தானா? பிறமாநிலங்களில் அவர்கள் வாழ பாதுகாப்பு கிடையாதா?

முதல்வர்: நான்மகாராஷ்டிர முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்திற்கு அவரிடமிருந்து கிடைத்த பதிலில் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுமென உறுதி கூறியிருக்கிறார். தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று நம்புகிறேன்

ஆதிமூலம்: சிவசேனைக் காரரர்கள், தமிழர்களை மட்டும்தான் தாக்கினார்களா? அல்லது கன்னடர், மலையாளிகள் ஆகியவர்களையும் தாக்கினார்களா? தென்மாநில முதலமைச்சர்கள் மூவருமாகச் சேர்ந்து கூட்டாக முறையீடுசெய்ய உத்தேசமுண்டா?

முதல்வர்: தென்னாட்டவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். தென்னிந்தியரல்லாதவர்களின் கடைகளும் தாக்கப்பட்டதாக மகாராஷ்ர முதலமைச்சர் எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

ராமமூர்த்தி: அங்குள்ள நிலைமையை ஆராய தூதுக்குழு ஒன்றைத் தமிழக அரசு அனுப்புமா?

முதல்வர்: திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. உமாநாத் ஆகிய இரு எம். பி. க்களும் முன்பு சென்று ஆராய்ந்தனர். அவர்கள் தாக்கப்பட்டு திரும்பியிருக்கிறார்கள்.

## இந்தியாவில் அணுமின்சாரம்

புதுடில்லி, ஏப்ரல் 2

இந்தியாவின் தாராபுரம் அணுமின்சார உலை முதல் தடவையாக நேற்று அணுமின்சார உற்பத்தியில் இறங்கியது. திட்டமிடப்பட்டதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே உற்பத்தி ஆரம்பமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆரம்பத்தில்15ஆயிரம்கிலோ வாட்மின்சாரம் உற்பத்தியாக்கப்பட்டது இதில் 10 ஆயிரம் கிலோமீட்டர்மின்சாரத்தை அணுமின்சார நிலையமே பயன்படுத்திக் கொண்டது. ஜூலை மாதத்தில் உற்பத்தி அதிகரிக்கப்படும்

தொலையுண்டிருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திரு பார்த்தசாரதி

## துணைவேந்தராக நியமனம்

புதுடில்லி, ஏப் 2.

ஐ. நா. வில் முன்னர் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகவிருந்த திரு. பார்த்தசாரதி நேருபல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யு. எஸ். தூதருக்கு

## சிலப்பதிகாரம் அன்பளிப்பு

சென்னை ஏப் 2

இந்தியாவிலுள்ள அமெரிகக தூதர் திரு. செஸ்டர் பவல்ஸ் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியை நேற்றுச் சந்தித்தார். அமெரிக்க தூதருக்கு திரு. கருணாநிதி சிலப்பதிகாரத்தின் சில பிரதிகளை அன்பளிப்பு செய்தார். திரு. படுவல்ஸ் தாம் எழுதிய ஒரு நூலின் பிரதியை திரு கருணாநிதிக்கு கொடுத்தார்.

## அண்ணா வைத்தியச் செலவு

சென்னை, ஏப்ரல் 2

முன்னாள் முதல் அமைச்சர் காலஞ்சென்ற திரு. அண்ணாதுரையின் வைத்திய செலவுக்காக தி. மு. கழகம் தமிழக அரசிடம் ரூ. 94000 செலுத்தியது எப்போது? திருத்தப்பட்ட வரவுசெலவு மதிப்பீட்டில் அதுபற்றி ஏன் குறிப்பிடவில்லை என்று தமிழக சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் விளக்கம்கேட்டார்.

இதற்கு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பின்வருமாறு பதில் கூறினார்: திராவிட முன்னேற்ற தலைமைக் கழகம் 12-9-68 அன்று அரசிடம் ரூ. 38770.21 செலுத்தியது. 26-12-68-ம் தேதி ரூ. 94752-74செலுத்தியது. ஆக மொத்தம் ரூபா 1,33,522-95 செலுத்தப்பட்டது. அக்டோபர் முதல் தேதி வரை செலுத்தப்படும் தொகைதான் திருந்த மதிப்பீட்டில் சேர்க்கப்படுவது வழக்கம். அகவேமுதல் தொகையை சேர்க்க முடிந்தது. இரண்டாவது தொகையைசேர்க்கவில்லை. அது அடுத்த ஆண்டு மதிப்பீட்டில் சேர்க்கப்படும்.

இன்புற்றுத் திளைக்கவேண்டுமென்றும் திளைத்த பின் தெளிவு பெற்று அந்த இதிகாசத்துக்கு இழுக்குச் சொல்ல முற்படுவோருக்குத் தக்க பதில் சொல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

வருடாவருடம் பெருமாள் கோயிலில் நடைபெற்றுவரும் கம்ப ராமாயணப்படிப் பின்போது ஸ்ரீ ராம பட்டாபிஷேகப் படிப்பன்று திருவிழா நடைபெற்று சீதாபிராட்டி சமேத ராமச் சந்திரமூர்த்திக்கு பட்டாபிஷேகம் செய்யும் வைபவம்நடைபெறுவது வழக்கம். இந்த திருவிழாவை யொட்டி ஸ்ரீ ராமபிரானின் கொலு மண்டபத்தில் சென்ற வருடம் தொடக்கம் பட்டாபிஷேக விழாவும் நடைபெற்று வருகிறது

நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீ ராம பட்டாபிஷேக விழா திரு. வைரவநாதன் சகோதரர்களின் நாதஸ்வர இசையுடன் ஆரம்பமானது. அடுத்து கம்பனை மீண்டும் காண என்ற தலைப்பில் கவிஞர் இ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் வி. கந்தவனம், காரை செ. சுந்தரம்பிள்ளை, வே. ஐயாத்துரை, வே. குமாரசாமி ஆகியோர் கவியியற்றிப் பாடினர். அடுத்து பின் திவ்விய ஜீவன சங்க யாழ்ப்பாணக் கிளையைச் சேந்த ஆண்களும் பெண்களும் திரு. எஸ் கனகரத்தினம் தலைமையில் பஜனை நிகழ்த்தியதைத் தொடர்ந்துபட்டாபிஷேகத் திரு விழா நடைபெற்றது தமிழ்மணி கணேஷசுந்தரன் கோஷ்டியினரின் வில்லிசை நிகழ்ச்சியுடன் நள்ளிரவு விழா நிறைவேறியது.

## திருட்டைத் தடுத்தார்

வேலணை, புதன்

வேலணை கிழக்கிலுள்ள பலசரக்குக் கடையொன்றில் நள்ளிரவில் பூட்டு உடைக்கப்படும் சப்தம் கேட்டதையடுத்து கடையுள் இருந்தவரினால் கடைக்குள் வைத்துப்பட்டாசு வெடிக்கப்பட்டதாம்.

பட்டாசு வெடிச் சப்தம் கேட்டவுடன் திருடமுயன்றவர் திருட்டுமுயற்சியைக் கைவிட்டு ஓட்டமெடுத்தாராம். அருகேயுள்ள வாசிகசாலையில் இந்தமுயற்சியிலீடுபட்டதாகக் கருதப்படுபவர் விட்டுச்சென்ற உடுப்பிலிருந்த சலவைக்குறி யைக் கொண்டு இத்திருட்டில் ஈடுபட்ட வாலிபர் ஒருவர்பற்றி பொலிசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுவைப் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

### குருபூசை

யோகாசுவாமிகளின் குருபூசைத்தினம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெகுவிமரிசையாகக்கொண்டாடப்பட்டது.

0 0 0

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் பிரார்த்தனைக் கோஷ்டியாரின் வாராந்த பஜனை வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

0 0 0

### சுற்றுலா

கைதடி நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலை மேல் வகுப்பு மாணவர்கள் சென்ற 23-ந் திகதி திருக்கோணமலைக்குக் கல்வி சுற்றுலா வொன்றை மேற்கொண்டனர். இருநாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்த இந்த மாணவர்கள் உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலை கோணேஸ்வர ஆலயம், கோட்டை, சீனன்குடா, இயற்கைத்துறைமுகம், வெந்நீர் ஊற்றுக்கள் முதலய பல இடங்களைப் பார்வையிட்டனர்.

### எம். பி. கவலை

'கந்தளாய் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் குறைந்துள்ளதால் தம்பலகாமம், கந்தளாய் போன்ற இடங்களில் உள்ள புராதன வயல் நிலங்களில் கூட வேளாண்மைச் செய்கை செய்ய முடியாத அபாயகரமான நிலை உருவாகி வருவதைக் கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். கரும்புச் செய்கையால் இப்பகுதி விவசாயம் பாழாகிறதென இப்பகுதி மக்கள் பலமுறை அறிவித்திருந்தும் அரசாங்கம் கவனிப்பதாகவில்லை. கரும்புச் செய்கைக்கு வேறுநீர் வருவாயை ஏற்படுத்தாது இப்பகுதி விவசாயிகள் விவசாயம் செய்து பிழைக்கும் நீரையே உபயோகிப்பது மிகவும்வருந்தத்தக்க செயல் என்று மூதூர் இரண்டாவது எம். பி. ஜனாப் எல். அப்துல் மஜீத் கூறினார்.

0 0 0

### மீண்டும் வேலை

அரசாங்க சேவையில் இருந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருந்த இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் முன்னாள் பொது காரியதரிசி திரு. பி. எம். எஸ். விஜயசுந்தரம் மீண்டும் வேலையில் நியமிக்கப்பட்டுள்ளார். காணி அபிவிருத்தி இலாகாவில் சிரமதானப் பிரிவில் வேலை செய்ய ஆரம்பித்திருக்கும் விஜயசுந்தரம் 11 மாதங்களுக்கு முன்னர் பிரதம மந்திரியின் அனுமதி இன்றி இலங்கை உதைபந்தாட்டக் கழகத்தின் மனேஜராக இஸ்ரேல் சென்றதைத் தொடர்ந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. சிற்றம்பலம் ஜூலைமாதத்துடன் இளைப்பாறுகிறார்.

வதிரி திருஇருதயக் கல்லூரி ஆசிரியர் திரு. அந்தனிஇராசையா இவ்வாண்டு ஆடிமாதம் இளைப்பாறுகிறார்.

எழுதுமட்டுவாள் இந்துத் தமிழ்ப் பாடசாலைத்தலைமை ஆசிரியர் திரு. எஸ். கந்தவனம் இவ்வாண்டு இறுதியில் இளைப்பாறுகிறார்.

## விசுவமடுவில் கால்வாய் வேலைகள்

தருமபுரம், புதன்

சீமெந்துப் பாலங்களைத் தொடர்பாக இணைப்பதன் மூலம் அமைக்கப்படும் நீர் வாய்க்கால் வேலைகள் முன்னிலும் அதிதுரிதமாக விசுவமடு விவசாயப்படை முகாம் ஊழியர்களால் அமைக்கப்படுவதை மேற் பார்வையிட்ட விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் வெகுவாகப் பாராட்டினர்.

ஒத்துழைப்புச் சக்தி கொண்ட ஊழியர்களின் அயரா முயற்சி விசுவமடுக் குடியேற்றத்திட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படும் என்பதையும் எடுத்துக்காட்டுவதாக இது அமைந்துள்ளதாகவும் கருதப்பட்டது.

## அழைப்பில்லை

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டிக் கிராமசபையில் மீண்டும் பத்திரிகை நிருபர்களுக்குக் கதவடைப்பு நடைபெற்றுள்ளது. வழக்கமாக உடுப்பிட்டிக் கிராம சபையின் ஒவ்வொரு மாதாந்தக் கூட்டத்திற்கும் பத்திரிகை நிருபர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுவந்தது. ஆனால் சென்ற 25-ம் திகதி நடைபெற்ற கூட்டத்திற்கான அழைப்புக் கடிதம் பத்திரிகை நிருபர்களுக்கு அனுப்பிவைக்கப் படவில்லை.

இது சம்பத்தமாக 10-ம் வட்டார உறுப்பினர் திரு. செ. ஈ. ஸ்வரலிங்கப் பெருமாள் தலைவர் திரு. ஆர். தர்மரத்தினம் திடம் கேட்ட பொழுது அவர் நிருபர்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதாகவும், அதனாலேயே நிருபர்களை அழைக்கவில்லை என்றும் பதிலளித்தாராம்.

பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

பொலிஸ் விசாரணையைத் தொடர்ந்து காரைநகரைச் சேர்ந்த இருவர் திட்டமிட்டுச் செய்த வேலைஇது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இவர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## சிவகுரு வித்தியாசாலைக்கு புதிய கட்டடம்

வல்வெட்டித்துறை புதன்

வித்தியாலயங்களில் 6-ம் வகுப்பு நீக்கப்பட்டதாலும் பாடசாலைகளில் இடம் பற்றாக்குறை காரணமாக இருநேரப் பாடசாலைகளாக இயங்கி வந்த போதும் இடநெருக்கடி இருந்து வருவதாக பருத்தித்துறை எம். பி. திரு. கே துரைரத்தினம் கல்வி அமைச்சரிடம் செய்த புகாரைத் தொடர்ந்து வல்வை சிவகுரு வித்தியாசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்காக ரூபா 15,000 ஒதுக்கப்பட்டிருப்பதாக கல்வி இலாகாவினால் எம். பி. க்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உடுப்பிட்டியில் போட்டியிடுவார்

உடுப்பிட்டி, புதன்

காலஞ்சென்ற முன்னாள் பருத்தித்துறை எம். பி. திரு. பொன் கந்தையாவின் சகோதரரான திரு. பொன். தியாகராசா அடுத்த பொதுத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடுவாரென தெரிகிறது.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, புதன்

பிற்றபெட்டர ஹூலந்தாவ அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சு. மகாதேவன் இம்மாதம் 18ந் திகதி முதல் கரவெட்டி விநாயகர் வித்தியாலயத்துக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

நடைபெறுகிறது!
டயரும்ஸ் ஸ்தாபனத்தாரின்
புத்தாண்டு மலிவு விற்பனை!
சிறுவர் சிறுமியர்களுக்கேற்ற
றெடிமேட் கவுண்கள், சேட் வகைகள்
சன்சூட் வகைகள்
இன்னும் பலவும்
தெரிவுசெய்ய விஜயஞ் செய்யுங்கள்
டயரும்ஸ்
54, மெயின் வீதி :-: யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எனது அனுபவத்தால் காணமுடியாததை நான் பேனுவினல் எழுத விரும்பவில்லை அனுபவத்தில் காண்பவற்றைத்தான் பிறருக்கு சொல்ல விரும்புகின்றேன். அப்போதுதான் அதில் முழுமை செறிந்திருக்கிம் என நான் நம்புகின்றேன். — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 21-ந் திகதி
( 3 - 4 - 69)


## வன்முறைச் செயல்

'பசி வந்திடப் பத்தும் பறந்திடும்' என்பது தமிழ் பழமொழி. பஞ்சம், பசி, அடக்குமுறை ஆகியன நிலவும் இடங்களில் வன்முறைச் செயலில் ஈடுபடவேண்டுமென்ற நாட்டம் ஏற்படுவது இயல்பு. ஆனால் வன்முறைச் செயல்களினுல் பெறக்கூடிய நன்மையும் பயனும் நீண்ட காலத்துக்கு நீடிக்கக்கூடியதல்லவென்பதையும் நிரந்தரமானதல்லவென்பதையும் உலக வரலாறு சான்று பகர்கிறதென்பதை எவரும் நன்கறிவர்.

சென்ற திங்கட்கிழமை மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் நடந்த கைக்குண்டு வீச்சு, பொலிசாரின் தடியடிப் பிரயோசம், கண்ணீர்ப் புகைப் பிரயோகம் ஆகிய சம்பவங்கள் யாருக்கும் நிச்சயம் மகிழ்ச்சியைக் கொடுக்க முடியாது. இச்சம்பவம் பற்றி இந்து சமூகத்தினர் வேதனையடைய வேண்டும்.

இத்துருதிஷ்ட சம்பவங்கள் பற்றி பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர். அந்த விசாரணை திருப்தியில்லையெனில் நீதி விசாரணைக் குழுவொன்றை நியமித்து இச்சம்பவம் பற்றி மட்டுமல்லாது ஆலயப்பிரவேசம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக வன்முறைச் செயல்கள், அதனுடன் தொடர்பான பொலிஸ் தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவை பற்றி விசாரணை செய்து இவற்றிற்கு காரணமாக உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வரலாம்.

ஆனுல் இச்சம்பவங்களின் அடிப்படைக் காரணங்களை அறிந்து, உணர்ந்து, வன்முறைச் செயல்கள் பரவாமலும் மன அமைதியைத் தேடி மக்கள் செல்லும் ஆலயப் பகுதிகளில் அமைதி நிலவவும் தகுந்த வழி காண முன்வரவேண்டிய பொறுப்பு பொதுமக்களை குறிப்பாக இந்து சமூகத்தைச் சேர்ந்த மக்களைச் சார்ந்திருக்கிறது. கடவுள் நம்பிக்கையற்ற சில கம்யூனிஸ்டுகள்தான் இந்த வன்முறைச் செயல்களுக்குக் காரணம் என்று இந்தச் சம்பவங்களுக்கான பொறுப்பை தட்டிக் கழித்துவிட நினைப்பதில் அர்த்தமும் இல்லை; அதனுல் யாருக்கும் நன்மையுமில்லை. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் தான் ஆலயப்பிரவேச இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு தங்கள் நோக்கத்தை அடைய முற்படுகிருர்கள் என்று கூறிக்கொண்டு தீண்டாமையை ஒழிக்கத் தயங்குவதன் மூலமும் ஆலயக் கதவுகளை மூடி வைப்பதன் மூலமும் அவர்களுக்கே அதிக வாய்ப்பளிப்பதாக இருக்கும். எவ்வித பாகுபாடுமின்றி ஆசார சீலர்களாக எவரும் ஆலயத்துள் சென்று வணங்கலாம் என கதவுகளை அகலத் திறந்து விட்டுள்ள ஆலயங்கள் பலவற்றில் சுவாமி வீதிவலம் வருவதற்கு அடியார்களைத் தேடிப் பிடித்து அழைக்கவேண்டிய அவல நிலை இன்னும்நீடித்திருப்பது ஆலயப்பிரவேசம் வேண்டுமென இயக்கம் நடத்துவோருக்கு உண்மையில் கடவுள் வழிபாட்டில் அக்கறையில்லையென்ற சிலரின் கூற்றை உறுதிப்படுத்துவதாக இருப்பது உண்மைதான். இதற்காக அவர்களுக்கு கடவுள் வழிபாட்டில் நம்பிக்கை இல்லையென்று கூறிக்கொண்டு ஆலயக்கதவுகளைப் பூட்டி வைத்து வன்முறைச்சம்பவங்களுக்கும், பிறரின் ஏளனத்துக்கும் இடம் கொடுப்பதைவிட, ஆலயக் கதவுகளைத் திறந்துவிட்டால் நம்பிக்கையற்ற அவர்களும் வரமாட்டார்கள், வேறு தொல்லைகளுக்கும் இடமிருக்காது.

# எல்லாளன் கரிகாலன் கஜபாகு தரிசித்த கோணேசர்

உலகெங்கும் வாழும் இந்துக்கள் கைலாயத்தை மிகவும் புனிதம் மிக்க வழிபாட்டுத்தலம் எனக்கொள்கின்றனர். திருநாவுக்கரசு நாயனுர் இறைவன் தடுத்த போதும் உடல்நலிவுற்ற காலையும் தவழ்ந்தேனும் உருண்டேனும் கைலாயஞ் செல்ல முயன்ருர். இறுதியில், நாவுக்கரசரின் உறுதியைக் கருத்திற்கொண்டு சிவன் கைலைக்காட்சியை திருவையாற்றில் அந்நாயனுருக்கு அருளுகின்ருன் அத்தகு விழுப்பஞ்சார்ந்தது கைலை. வேதங்கள், புராணங்கள் கோணேஸ்வரத்தை தென்கைலை என்று போற்றுமாயின் இத்தலம் இந்துக்களுக்கு எத்துணை வேண்டற்பாற்று என்பது புலனுகும்.

### எல்லாளனும் கரிகாலனும்

இக்கோயிலின் வரலாறு இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகள் தொன்மை மிக்கது. ஹரப்பா மொஹெஞ்சதாரோ நாகரிக காலத்தைச் சார்ந்தது என்றும் கருதப்படுகின்றது. கி. மு. 215 க்கும் 245 க்கும் இடையே நாற்பத்தைந்து ஆண்டுகள் அனுராதபுரத்தில் அரசாண்ட எல்லாளன் அக்கோயிலுக்கு வருகை புரிந்துள்ளான். இலங்கைக்கு கி. பி 110-ல் வந்த கரிகாலன் என்னும் சோழ மன்னனும் இங்கு வந்து சென்றுள்ளான்.

கி. பி. 436 தொட்டு 463 வரை இருபத்தைந்து ஆண்டுகள் ஏழு தமிழ் மன்னர்கள் அனுராதபுரத்தை ஆட்சிபுரிந்துள்ளனர். இவர்களின் ஆட்சிக்காலத்தில் தான் குளக்கோட்ட மன்னன் இக்கோயிலைக் கட்டியுள்ளான். இதனைப் பற்றி பதினைந்தாம் நூற்ருண்டில் கவிராஜர் என்பவரால் இயற்றப்பட்ட கோணேசர் கல்வெட்டு விபரமாகக் கூறுகின்றது. கோயிலைக் கட்டிய குளக்கோட்டன், அருகாமையில் ஒரு குளத்தையும் கட்டினுன். அருகில் உள்ள கிராமங்களுக்குச் சில பணிகளையும் வரையறுத்தான். கட்டுக்குளத்தார் இறைவன் தொழும்பு செய்ய, நிலாவெளியார் காப்பணிதல், ஆறு அவணம் நெல் வழங்குதல், ஆயத்தீர்வை கட்டல் வேண்டும். கொட்டியாபுரத்தார் வெற்

இலுப்பை, புன்னை விதைகளில் இருந்துபெற்ற எண்ணெய்முதலியன அனுப்புதல் வேண்டும். தென்கிழக்கில் ஏழு எண்ணெய்க்கிணறுகள் இருந்தன. இக்கோயிலில் ஐயாயிரம் விளக்குகள் நெய்யாலும் 11000 விளக்குகள் எண்ணெயாலும் எரிக்கப்பட்டுவந்தன.

பின்னர் இங்கு விஜயஞ்செய்த கஜபாகு மன்னன் கொட்டியாபுரத்தில் ஒரு குளத்தைக் கட்டுவித்தான். அவ்வயலில் உள்ள மக்களை நெல் விதைக்கும்படியும் புன்னை, இலுப்பை, ஆமணக்கு, தென்னை முதலிய தோட்டங்கள் நிறுவும்படியும் பணித்தான். அவற்றில் இருந்துபெறும் விளைச்சலில் பத்தில் ஒரு பங்கினைக் கோயிலுக்கு வழங்கும்படியும் கட்டளையிட்டான். இம்மன்னன் இக்கோயிலை இடித்து பௌத்த கோயில் கட்டும் எண்ணம் கொண்டு வந்தான். வழியில் அவன் தன் கண்ணிழந்தான். பின் அவன் கோணைநாயகனை வழிபட்டுக் கண்பெற்ருன். இதனுல் அவ்விடம் கண்தழை எனப்பெயர் பெற்று இன்று கந்தளாய் என மருவிற்று. இவ்

பல்லவ சிற்ப முறையாகும். சிதைந்து காணப்பெறும் கோயில் பகுதிகளை ஆராய்ந்தோரும் பல்லவ சிற்பமுறையில் இக்கோயில் அமைக்கப்பட்டு இருந்தது என்று பகர்கின்றனர்.

இக்கோயிலை இடித்துத தளபதி கொன்டன்டிஸா போர்த்துக்கேய மன்னனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் இக்கோயில் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்:-

"இக்கோட்டையைக் கட்ட நான் சென்றபோது கோயிலில் பல கல்வெட்டுச் சாசனங்களைக் கண்டேன். அவற்றுள் ஒன்று. இக்கோயிலைக் கட்டியவன் குளக்கோட்ட மகராஜா என்று குறிப்பிட்டது, இக்கோயிலை 1624ம் ஆண்டில் போர்த்துக்கேயர் இடித்து இக்கோயில் தூண்களை, கற்களை பாவித்துக் கோட்டையைக் கட்டினுர்கள்.

இக்கோட்டை வாயிலில் காணும் இரு தூண்களிலும் பாண்டியனின் மீன் இலச்சினைகள் காணப்பெறுகின்றன. குடுமியாமலைச்சாசனத்தில் இதுபற்றிய குறிப்புண்டு. 13ம் நூற்ருண்டில் முதலாம் புவனேகபாகுவை

**வே. வரதசுந்தரன்**
ஆசிரியர் இந்துக்கல்லூரி திருமலை.

விபரங்களை முன்னர் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியின் பணிமனையில் கடமையாற்றிய இன்டியோபிளஸ் என்பவர் 1831ம் ஆண்டு நவம்பர் 26ம் திகதி வெளியான இலங்கை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார்.

இக்கோயில் பின்னர் பல்லவ சிற்ப முறைப்படி நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறது. இலங்கையிலிருந்து விரட்டப்பெற்ற மானவன் என்னும் மன்னன் தன்குடும்பத்துடன் இந்தியா சென்று நரசிம்மவர்மன் என்னும் மன்னனுடன் தங்கி அங்கு சிறுத்தொண்டர் ஈடுபட்ட வாதாபி யுத்தத்தில் பங்குபற்றினுன். இப்பல்லவனின் உதவியுடன் பின்னர் இவன் இலங்கை வந்து தனது எதிரியாகிய தபோதீசனை வென்ருன். மானவன் ஆட்சிக்காலத்தில் பல்லவ சிற்ப முறையில் இக்கோயில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது.

பல்லவ சிற்ப முறையில்

வென்ற புவனேகவீரபாண்டியன் இக்கயலை இங்கு பொறித்தான்.

இக்கோயிலைப்பற்றி கோயிலில் உறையும் இறைவனைப்பற்றி7ம்நூற்ருண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாயனுர் ஒரு பதிகம் பாடியுள்ளார். 15 நூற்ருண்டில் வாழ்ந்த அருணகிரிநாதரும் இரு திருப்புகழ் பாடல்களில் கோணேசர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கோணேசர் கல்வெட்டில் குளக்கோட்டன் பாடிய பாடல் ஒன்று உண்டு. அதில்தான் உறவினருக்குக் கொடுக்காது பல செல்வங்களை எல்லாம் கோணநாயருக்கு ஈந்துள்ளார் என்றும் இதை அழிக்க எண்ணுவோர் அழிவர் என்றுங்குறிப்பிட்டுள்ளார். அவ்வடிகள் வருமாறு:

வீருக வென்மரபோர்க்
கியாமற்
கோணமலை விமலற்
கீந்தேன்
பேருன பெரியோரே
யிதற்கழிவு
நினைப்பவர்கள் வெட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் சேவை விஸ்தரிப்பு

அளவெட்டி, புதன்
மாவிட்டபுரப் பகுதிப் பிரயாணிகளின் நலன் கருதி, யாழ்ப்பாணம்-தெல்லிப்பளை பஸ் சேவை மாவிட்டபுரம் வரைக்கும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

மாவிட்டபுரம் கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் இப்பகுதி மக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களை இ. போ. ச. முகாமையாளரிடமும், காங்கேசன்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடமும் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இந்த பஸ்சேவை விஸ்தரிக்கப்படுமென இ. போ. ச. முகாமையாளர் மேற்படி கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. க சிவமகாராசாவுக்கு அறிவித்துள்ளார்.

## உடுவில் விவசாயிகள் கோரிக்கை

உடுவில், புதன்
'அம்பிகைவளைக் குளத்து வலையை உடனே கைவிட்டு சிலம்பாய்க் குளத்தில் கிணற்றுத் துலை வெட்டி 50 ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்களுக்கு நீர்ப்பாய்ச்ச வசதிசெய்யவும்' என யாழ்ப்பாணக் கமத்தொழிற்சேவை உதவி ஆணையாளருக்கு உடுவில் விவசாயிகள் பலர் கையொப்பமிட்ட மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உடுவில் பயிர்ச்செய்கைக் குழு அம்பிகைவளைக் குளத்தில் கிணற்றுத்துலை கட்ட முன்வந்ததை ஆட்சேபித்து இவர்கள் மகஜர் அனுப்பியுள்ளனர். இக்குளத்தினுல் நீர் பாய்ச்சும் நெல் வயல் மிகக் குறைவென்றும், ஏற்கனவே நான்கு கிணறுகள் நீர் பாய்ச்சிக்கொண்டிருக்கின்றன என்றும் அவர்கள் தமது மகஜரில் ஆட்சேபத்திற்குக் காரணம் காட்டியுள்ளனர். மேலும் இதற்குப் பதிலாக மேற்குறித்த குளத்திற்குச் சற்றுத் தள்ளியுள்ள சீலம்பாய்க் குளத்தில் குணற்றுத் துலை வெட்டி,

தமிழக அரசாங்கத் திட்டம்

## தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறுசெய்கிறதாம்

சென்னை, ஏப் 2
மொழிப் பிரச்னை குறித்து தமிழ்நாடு சட்டசபையின் விசேஷக் கூட்டத்தில் நிர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்திய உள்துறை அமைச்சருக்கு அனுப்பப்பட்டதற்கு அவரிடமிருந்து பதில் வந்துள்ளதாக சட்ட அமைச்சர் எஸ். மாதவன் தெரிவித்தார். மேல்சபையில் திரு. என். ஆர். தியாகராஜன் (சாங் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இதைத் தெரிவித்தார்.

இந்திய ஒருமைப்பாட்டுக்கு இத்தீர்மானம் ஊறு தேடுவதாக உள்ளதாக உள்துறை அமைச்சர் தனது பதிலில்குறிப்பிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டு மொழித் தீர்மானம் ஆங்கிலத்தைக் கால வரம்பின்றி இந்திய நாட்டின் ஆட்சிமொழியாக ஆக்குவதாக உள்ளது. இதைப் பெரும்பான்மையான ராஜ்யங்கள் ஏற்கவில்லை என்றும் உள்துறை அமைச்சர் தனது பதிலில் தெரிவித்திருப்பதாவும், காலஞ்சென்ற பாரதப் பிரதமர்கள் அளித்த உறுதிமொழியையொட்டி 1967ம் ஆண்டு யூனியன் ஆட்சிமொழித் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டதென்றும், ஹிந்தி மொழி பேசாத மாநிலத்தவர் மீது விழும் தேவையில்லாத கல்விச் சுமையைக் குறித்து மத்திய அரசாங்கம் கவனத்தில் வைத்துக்கொள்ளும் என்றும் மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் திரு. மாதவன் மேற்கொண்டு தெரிவித்தார்.

மும்மொழித் திட்டத்தை ஒழித்ததன் மூலம் தேசீய ஒற்றுமைக்கு ஊறு தேடுவதாக முடியக்கூடுமென்று மத்திய அமைச்சர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அனைத்து மொழிகளும் வளர்ச்சியடையத் தேவையான நிதியுதவி அளிக்கப்படும் என்று மத்திய அமைச்சர் தமது பதிலில் உறுதி கூறியுள்ளதாக திரு. மாதவன் தெரிவித்தார்.

## சைவ அனுட்டான பாதுகாப்புசபை தீர்மானம்

அளவெட்டி, புதன்
''சைவாலய கிரிகைகள் என்றென்றும் சிவாகமங்களைப் பின்பற்றியே நடைபெறுவனவே அல்லாமல் மற்றெந்த நாட்டையோ மற்றெந்த சமயத்தையோ பின்பற்றுவதற்கு உரியன அல்ல. ஆலய விஷயத்தில் கீழ்மாகாணத்தை பின்பற்றுக, தமிழ்நாட்டை பின்பற்றுக'' என்று அறிக்கைவிடும் தலைவர்களின் மூடத்தனத்தையிட்டு இச்சபை வருத்தம் தெரிவிக்கும் தீர்மானமொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச்சபை கூட்டத்தில் நிறைவேறியது.

கீரிமலை சிவன்கோவில் மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தி நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் பின்வருமாறு:

ஆலயவழிபாடு ஒருசமய விஷயமே தவிர சமூக விடயமல்ல. ஆகையால இப்படிப்பட்ட விஷயத்தில ஆலயப்பிரவேச இயக்கம் என்ற ரீதியில அரசியல வாதிகளோ அன்றி அரசாங்கமோ தலையிடுவதையும், வழிநடத்துவதையும் இச் சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆலயப்பிரவேச இயக்கத்தினுடைய அட்டூழியங்கள் கோவில்களில் ஏற்படாமல் நீதிமன்றமூலமாகவோ அலலது அரசாங்கமூலமோ வைதீகசைவர்களின் வழிபாட்டுமுறைக்கு பாதுகாப்பு கிடைக்கும் வரை சகல ஆலயங்களையும் பூட்டி வைப்பதே தகுந்ததென இச்சபை தீர்மாணிக்கிறது.

சைவத்தைப் பாதுகாக்க இச்சபை அரசியலில ஈடுபட்டு தேர்தலில இறங்க வேண்டுமென்றும் தீர்மானம் ஒன்று ஆலோசிக்கப்பட்டு விரிவான அறிக்கை ஒன்றை தயாரிக்க அடுத்த கூட்டத்துக்கு இவ்விஷயம் ஒத்திவைக்கப்பட்டது.

## தேசிய அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதால் பயனில்லை

உள்ளவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வரலாம்.

ஆனால் இச்சம்பவங்களின் அடிப்படைக் காரணங்களை அறிந்து, உணர்ந்து, வன்முறைச் செயல்கள் பரவாமலும் மன அமைதியைத் தேடி மக்கள் செல்லும் ஆலயப் பகுதிகளில் அமைதி நிலவவும் தகுந்த வழியில் நம்பிக்கை இல்லையென்று கூறிக்கொண்டு ஆலயக்கதவுகளைப் பூட்டிவைத்து வன்முறைச்சம்பவங்களுக்கும், பிறரின் ஏளனத்துக்கும் இடம் கொடுப்பதைவிட, ஆலயக் கதவுகளைத் திறந்துவிட்டால் நம்பிக்கையற்ற அவர்களும் வரமாட்டார்கள், வேறு தொல்லைகளுக்கும் இடமிருக்காது.

...ைதயும் கட்டினுன். அருகில் உள்ள கிராமங்களுக்குச் சில பணிகளையும் வரையறுத்தான். கட்டுக்குளத்தார் இறைவன் தொழும்பு செய்ய, நிலாவெளியார் காப்பணிதல், ஆறு அவணம் நெல் வழங்குதல், ஆயத்தீர்வை கட்டல் வேண்டும். கொட்டியாபுரத்தார் வெற்றிலை, பாக்கு, கதலி, அரைத்த சந்தனம், பால், தயிர், நெய் முதலியன அனுப்புதல் வேண்டும். கௌரிமுனை, ஆமணக்கு, ...வாதாபி யுத்தத்தில் பங்குபற்றினுன். இப்பல்லவனின் உதவியுடன் பின்னர் இவன் இலங்கை வந்து தனது எதிரியாகிய தபோதிசனை வென்றுன். மானவன் ஆட்சிக் காலத்தில் பல்லவ சிற்ப முறையில் இக்கோயில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டது.

பல்லவ சிற்ப முறையில் குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டு உள்ளன. குன்றைப் பிளந்து கற்றூண்கள் நிறுத்தி சிலைகளைக் கற்களால் உருவாக்கிக் கட்டுவது ...ளார் என்றும் இதை அழிக்க எண்ணுவோர் அழிவர் என்றும் குறிப்பிட்டுள்ளார். அவ்வடிகள் வருமாறு:

வீருக வென்மரபோர்க்
கியாமற்
கோணமலை விமலற்
கீந்தேன்
பேருன பெரியோரே
யிதற்கழிவு
நினைப்பவர்கள் வெட்பு
நீங்கி
நீருகப் போவரிது நிச்சய
நிச்
சயங் கோணை நிமல
ராணை.

## ஆசிரியருக்கு கடிதம்

# இவர்களுக்கு விமோசனமில்லையா?

சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் நெல்லியடி மஹாத்மா தியேட்டருக்கு அருகாமையில் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட கட்டிடக் கைத்தொழில் நிலையத்தில் பயிற்சிபெற்ற நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இன்றுவரைக்கும் மேற்படி துறையில வேலைகள் எதுவுமின்றிக் கஷ்ட நிலையில் இருக்கின்றனர்

இவர்களில் சிலர் இப்போது தனிப்பட்ட மேசன்மாருடன் நாட் கூலிக்குச் சென்று பிழைத்துவருகின்றனர். போதிய சம்பளம் இல்லாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். தொழிற்கந்தோர் மூலம் அரசு நல்லதோர் பயிற்சியை இவர்களுக்கு அளித்துவிட்டு இப்போது பாராமுகமாக இருப்பது மிகவும் கவலைக்குரியது. பயிற்சியை முடித்த மாணவர்களுக்கு அவரவர்களுடைய தொகுதிகளின் பட்டின, கிராமச்சபைகளாவது தக்க தொழில் கொடுத்து ஆதரிக்கவும், தமது கட்டிடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும் முன்வர வேண்டும். எமது அரசாங்கத்தின் பயிற்சிகள் ஒவ்வொன்றும் இப்படியே விரயமாகவேண்டுமா என்று இம்மாணவர்கள் கிலேசப்படுகின்றனர். இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் இவர்தம் நலன்களைக் கவனிப்பரா?

க. பேரம்பலம்
நெல்லியடி.

## ...ர்வேலி ஆலய பரிபலதர்களுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வியா.

கோப்பாய் கிராம சபை எல்லைக்குட்பட்ட சகலஆலயங்களையும்சிறுபான்மைத்தமிழர்களின் வழிபாட்டுக்குத் திறந்து விடுவதற்கு ஆவன செய்யுமாறு கோப்பாய்த் தொகுதி எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளையையும் கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. தி. பரமானந்தராஜாவையும் ஆலயப் பிரவேசக் குழுவையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம்கோப்பாய் சூரியோதையசனசமூக நிலைய பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நீர்வேலி கந்தசாமி கோயிலைச் சிறுபான்மைத் தமிழர்களின் வழிபாட்டுக்குத் திறந்துவிட்டமைக்காக அவ்வாலய பரிபாலகர்களுக்கு இக் கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

(க. நி.)

## கலைவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

பூநகரி சக்தி கிராம முன்னேற்றக்கழகத்தின் திறப்பு விழாவும், கலைவிழாவும் அடுத்தமாத முதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது.

(ந. நி)

## இசைஉரை நாடக

பண்டத்தரிப்பு, புதன்

ஈஸ்டர் திருநாளையொட்டி உரும்பராய் புனித மிக்கேல் ஆலய முன்றலில் 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' என்னும் இசைஉரை நாடகம் திருமறைக்கழக மன்றத்தினரால் நடித்துக்காண்பிக்கப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து ஏராளமானேர் இதனைக்கண்டு களித்தனர்.

## பரிசுத்தவாரச் சடங்குகள்

பண்டத்தரிப்பு, புதன்

பரிசுத்த வாரத்தையொட்டி நடைபெறவிருக்கும் புனித சடங்குகள் இளவாலை சென். ஆன்ஸ் தேவாலயம் சென். ஜேம்ஸ் தேவாலயம் பத்தாவத்தை பிலிப் நேரியார் தேவாலயம் ஆகிய இடங்களிலும் சில்லாலை, மாதகல் பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலும் நடைபெறவிருக்கின்றன.

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் ட்டது

# இராவணன் தாய்க்கு அந்தியேட்டி செய்த 'கன்னிகார்' எனும் கன்னியா

கிறிஸ்து பிறப்பதற்கு 6000 வருடங்களுக்கு முன் வாழ்ந்தவனென்று கூறப்படும் இலங்கேஸ்வரனுகிய இராவணனுக்கு தாயாகிய மாயா கன்னியிடம் அளவு கடந்த பற்றுதல் இருந்தது. இருவரும் சிறந்த சிவபக்தர்கள். இமய மலையிலிருந்து தனக்கு ஒரு லிங்கம்எடுத்து வரும்படி மாயாகன்னி ஒரு நாள் இராவணனிடம்கேட்டாள். உடனே, அவன் தனது விமானத்தில் புறப்பட்டு இமயமலையை அடைந்து சிவபெருமானின் உறைவிடமாகிய கைலாசத்தையே தோள் கொடுத்துப் பெயர்க்கப்பார்த்தான். மலை அதிர்ந்தது, உமாதேவி அச்சமுற்ருள். சிவபெருமான் தன் கால் பெருவிரலால் மலையை அழுத்த இராவணனும் கீழே அகப்பட்டு வருந்தினுன். உடனே தன் நரம்புகளால் ஒரு யாழை புனைந்து அதில் சாமகானத்தை இசைத்தான். அதைக்கேட்டு மனம் மகிழ்ந்த சிவபெருமான் அவனை விடுவித்து ஒரு லிங்கத்தையும் கொடுத்து அனுப்பினுர்.

இராவணன் லிங்கத்தோடு திரும்பும் வழியில் மகாவிஷ்ணு ஒரு பிராமண ரூபத்தில் வந்து மாயாகன்னி இறந்துபோய்விட்டாள் என்று . செய்தியைக்கூறி லிங்கத்தை திருக்கோணமலையில் ஸ்தாபிக்கும்படி சொன்னுர். இராவணன் அவ்வாறே செய்து அதில் கோவிலும் கட்டி எழுப்பிவிட்டுதாய்க்கு அவ்விடத்திலேயே அந்தியேட்டி கிரியைகளையும் செய்தான்.

இந்த வரலாறுஇன்னெரு விதமாக கூறப்படுவதுமுண்டு. இராவணனுடைய தலைநகரமாகிய திரிகூட பர்வதத்தின் உச்சியிலுள்ள இலங்காபுரியிலிருந்து தினமும் வந்துபோவதுகஷ்டமாதலால், திருக்கோணமலையில் ஏற்கனவே பிரமதேவனுல் ஸ்தாபிக்கப்பட்ட இமயத்து லிங்கத்தை இலங்காபுரிக்கு கொண்டுவரும்படி மாயாகன்னியானவள் மகனிடம் கோர, இராவணன் அம்மலையை வாளால் வெட்டி பெயர்த்தெடுக்கமுயன்றசமயம் தாயின் மரணத்தைக் கேள்விப்பட்டு அவ்விடத்தில் அந்திய கிரியைகளை நடத்தினுன்என்றும், சுவாமிமலையில் இன்றும் காணக்கூடியதான வாள்வெட்டு போன்ற மலைப்பிளவு இராவணனுடைய கிருத்தியமே என்று கூறுவாரும் உளர்.

இராவணன் தாய்க்கு அந்தியேட்டி செய்த இடம் திருக்கோணமலையிலிருந்து சுமார் ஆறுமைல் தூரத்திலுள்ள கன்னியா என்று கூறப்படுகிறது. இங்குள்ள வெந்நீர்கிணறுகள் தோன்றுவதற்கும் இராவணனே காரணமாயிருந்தானும். தனக்கு அந்தியேட்டி செய்யப்பட்ட இடத்தை இராவணன் தாயாகிய மாயா கன்னி எப்பொழுதும்காத்து வருகிருள் என்றும், அது காரணத்தாலேயே அவ்விடத்துக்கு 'கன்னிகார்' என்று பெயர் வந்ததாயும் பின்னர் இது திரிந்து 'கன்னியா' அகியதென்றும் அங்கு வசிக்கும் பரம்பரை குடிமக்கள் கூறிக்கொள்ளுகிருர்கள்.

உண்மையில் கன்னியா வெந்நீர் ஊற்றுகள் எப்படித் தோன்றின, எப்பொழுது தோன்றின, யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்ற சரித்திரச்சான்றுகள் எவையும் கிடையாது. அனுதி காலம் தொட்டு அவை அங்கே இருந்து வருகின்றன.

சுமார் இருபத்தாறு அடி நீளமும், பதினுறு அடி அகலமுள்ள ஒரு மலையடி வாரத்தில் இந்த ஏழு ஊற்றுகளும் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு ஊற்றையும் சுற்றி ஒன்றரை அடி உயரத்துக்கு கட்டுச் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. தரையில் நின்றுகொண்டு ஒருவர் கை வாளியால் அள்ளிக் குளிக்கக்கூடிய ஆழத்தில் ஊற்றுகள் இருக்கின்றன.

எத்தனை பேர் நின்று குளித்தாலும் ஊற்றுகளின் நீர் மட்டம் தாழ்வதுமில்லை, உயர்வதுமில்லை. எப்பொழுதும் ஒரே மட்டத்தில் இருக்கும். இது தவிர இவ் வூற்றுகளின் விசேஷம் என்னவென்ருல் அவை ஒன்றுக்கொன்று மிகவும் அண்மையில் இருந்த போதிலும், அவற்றிலுள்ள நீரின் உஷ்ண நிலை வித்தியாசப்படுவதே.

வெளியிலுள்ள காற்றின் உஷ்ணம் 77 டிகிரியாயிருந்தால் ஊற்றுகளின் உஷ்ணம் 86 லிருந்து 107 டிகிரிவரை வேறுபடுகிறது. ஊற்றுக்களின் படுக்கைகளில் களங்கமற்ற வெள்ளை 'கிறவல்' கற்கள் இருப்பதால் ஊறும் நீர் மிகத் தெளிவாக இருக்கிறது ஒரு விதமான கெட்ட நாற்றமும் இருப்பதில்லை. சில ஊற்றுக்களிலிருந்து காற்றுக் குமிழிகள்வெளிவந்துகொண்டிருக்கின்றன.

கன்னியா ஊற்றுகளில் ஸ்நானம் செய்தால் தேகத்திலுள்ள வாதம் போன்ற நோய்கள் தீரும் என்று நம்பப்படுகிறது. தினமும் நூற்றுக்கணக்கான யாத்திரீகர்கள் இங்கு வந்து குளித்துவிட்டுப் போகிருர்கள். ஊற்றுக்களில் வெந்நீர் இருப்பதும் அதிலவியாதிகளைக்குணப்படுத்தும் தன்மை இருப்பதும்போக பலர் கன்னியாவே திருக்கோணமலையின் கோயில் தீர்த்தம் என்று நம்புவதால் கோணேசரைத் தரிசிக்க வருகிறவர்கள் கன்னியாவுக்கு போகத் தவறுவதில்லை.

## வி. என். பி.

...கனவே நான்கு கிணறுகள் நீர் பாய்ச்சிக்கொண்டிருக்கின்றன என்றும் அவர்கள் தமது மகஜரில் ஆட்சேபத்திற்குக் காரணம் காட்டியுள்ளனர். மேலும் இதற்குப் பதிலாக மேற்குறித்த குளத்திற்குச் சற்றுத் தள்ளியுள்ள சிலம்பாய்க் குளத்தில் குணற்றுத் துலை வெட்டி, 50 ஏக்கர் நெல் வயலுக்கு நீர்ப் பாய்ச்சலாம் என்றும் இக்குளத்தில் கிணறுகள் இல்லை என்றும் புதிய கிணறுகள் வெட்டுவதால் பல விவசாயிகள் பலனடைவர் என்றும் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர்.

## வட்டக்கச்சி தமிழரசுக்கிளை தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.

'இப்போதிருக்கும் குழ்நிலையை உத்தேசித்து தமிழரசுக்கட்சியின் அடுத்த பொதுச் செயலாளராக பண்டிதர் கா. பொ. இரத்தினம் நியமிக்கப்படவேண்டும்'

இவ்வாறு ஒரு தீர்மானத்தை வட்டக்கச்சி தமிழரசு வாலிப முன்னணி ஏகமனதாக நிறைவேற்றி தலைமைப்பீடத்திற்கு அனுப்பிவைத்துள்ளது. (ந. நி.

## பிரான்ஸ் மகாநாட்டில் பங்குபற்றுவர்

பண்டத்தரிப்பு, புதன்

பிரான்சிலுள்ள போர்டோ என்னுமிடத்தில் நடைபெறவிருக்கும் திருக்குடும்பக் கன்னியர் சபை சம்பந்தமான மகாநாடொன்றிற்கு யாழ்ப்பாணம் இளவாலைஆகிய இடங்களிலிருந்து சங். விசிட்டேசன் சங். மரியா, சங். யூலாலி ஆகிய கன்னியர் சென்றுள்ளனர். இம்மகாநாடு இம்மாதத்தில் நடைபெறவிருக்கிறது.

## பங்குனி உத்தரம்

அளவெட்டி, புதன்

மாவிட்டபுரம் தெற்கு பட்டிக்கடவை வைரவ ஆலயத்தில நேற்று பங்குனி உத்தரத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திரு. வி. ஆறுமுகத்தின் பக்திப்பாடலும் மகாஜனக்கல்லூரி ஆசிரியர் செ, கதிரேசபிள்ளையின் சொற்பொழிவும் கோப்பாய் ப. தியாகராசாவின் கதம்ப இசைவிருந்தும்இடம் பெற்றன.

இறுதியில் வைரவப்பெருமான் திருஊஞ்சலும் வீதி உலாவும் நடைபெற்றது.

...தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தி நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் பின்வருமாறு: ஆலயவழிபாடு ஒருசமய...மானம் ஒன்று ஆலோசிக்கப்பட்டு விரிவான அறிக்கை ஒன்றை தயாரித்து அடுத்த கூட்டத்துக்கு இவ்விஷயம் ஒத்திவைக்கப்பட்டது.

# தேசிய அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதால் பயனில்லை

## கிளிநொச்சி எம். பி. கூறுகிருர்

கிளிநொச்சி, புதன்

தமிழ்மக்கள் இழந்த உரிமைகள் சிலவற்றினையாவது ஒத்துழைப்பின் மூலம் பெறலாம் என்று எண்ணியே தேசிய அரசாங்கத்துக்குத் தமிழரசுக் கட்சி ஒத்துழைப்பு கொடுத்தது. ஆனல் தேசிய அரசாங்கமும் ஐக்கியதேசியக் கட்சித் தலைவர்களும் இலகுவில் தரத்தக்க உரிமைகளையும் தருவதாகக் கூறிய உரிமைகளையும் தருவதற்குக் கூட பெரிதும் தயங்குவதால் இனியும் தன்மானத்தினை அடைவு வைத்து ஒத்துழைப்பதால் எவ்வித பயனுமிலலை என்ற முடிவுக்கு இன்று வந்துவிட்டது.

இவ்வாறு கிளிநொச்சித் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் கிளிநொச்சித் தொகுதி தமிழரசுக்கட்சி மாவட்டசபைக் கூட்டத்தில பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், திறைசேரிச் சுற்றறிக்கை 760 தமிழுக்குக் கொடுக்கும் உரிமைகளைக் கொடுப்பதற்கு அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்காது என்பதும் அதன் மூலம்சிங்களத்தைப் புகுத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதும்நன்கு புலனுகிறது. தமிழரசுக்கட்சியின் செயலமுறைப்போராட்டமாகவே மாறவேண்டிய நிலைமை உருவாகிவிட்டது என்ருர்.

சிங்கள உத்தியோகத்தர் தமிழ் கற்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும்ரவரை தமிழ் உத்தியோகத்தர் சிங்களம் கற்கவேண்டும் என்ற நிபந்தனையைநிறுத்திவைக்கவேண்டும்.

திரைப்படக் குறைப்பை நிறைவாக்கவேண்டும் என்றும், தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றக்குழுள்திர்க்கட்சியாக இயங்கவேண்டும் என்றும் பல பிரேரணைகள் ஏகமனதாக இருக்கவேண்டும் என்றும் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட சபையின் புதிய ஆண்டுத் தலைவராக திரு. கா. பொ. இரத்தினமும் செயலாளராகத் திரு. சு. முருகேசுவும்தெரிவு செய்யப்பட்டனர். பொதுக் காரியசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் பொ திருஞானம் (பளை) ஆ. குலசேகரம் (துணுக்காய்) வி. இரத்தினம் (கிராமசபைத் தலைவர். பல்லவராயன் கட்டு) மா. சின்னத்தம்பி (இராமநாதபுரம்) மா. பூபாலசிங்கம் (வட்டக்கச்சி) ஐவரும்ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டனர். இம் மாவட்டசபை ஆண்டுக்கூட்டத்தில கிளிநொச்சித் தொகுதியிலுள்ள 16 கிளைகளிலிருந்தும் 4 வாலிப முன்னணியிலிருந்தும் பிரதிநிதிகள் நூற்றுக்கு மேற்பட்டோர் சமுகமளித்திருந்தனர்.

## குறை நீங்கியது

சங்கானை, புதன்

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலத்தில் விசேஷ சித்திபெற்ற திருமதி நித்தியலட்சுமி இராமச்சந்திரன் கனகராயன்குள மகாவித்தியாலத்திற்கு ஆங்கிலஆசிரியையாகநியமிக்கப்பட்டுள்ளார். இங்கு நீண்டகாலமாக ஆங்கில ஆசிரியர் இல்லாக்குறை இருந்தது அதிபர் திரு. சிவானந்தமும் பெற்ருேர் ஆசிரியர் சங்கமும் எடுத்த பெருமுயற்சியால் இக்குறை நிவர்த்தி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைபற்றி சர்வதேச உணவு நிறுவனம்

கொழும்பு, புதன்

ஆசிய நாடுகளில் நெல்உற்பத்தியில் முன்னேற்றமடைந்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்ருகவுள்ளது. பாதகமான பருவகாலநிலைகளையும் சமாளித்து நெல் உற்பத்தியில இலங்கை பெரும்முன்னேற்றமடைந்து வருகிறது. இவ்வாறு சர்வதேச உணவு விவசாய நிறுவனம் தனதறிக்கையொன்றில குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org